சாயி மகராஜ் குருவை தேடி
SAI MAHARAJ GURUVAI THEDI

ஆண்டு: 6 | இதழ்: 07 | டிசம்பர் - 2024 | விலை - ரூ.15/
VOL:6 | ISSUE: 07 | December - 2024 | Rs. 15/-





சமத்துவ சாகரம் குருநானக்

சாயி பக்தர்களுக்கு ஓர் வரப்பிரசாதம்



நமது சாயி மகராஜ் குருவை தேடி ஆன்மீக மாத இதழுக்கு மூன்று வருடத்திற்கு ரூ.550/- மட்டும் செலுத்தி சந்தாதாரராகுங்கள்!

அரிய பொக்கிஷமான "சாயி தாயத்தை" இலவசமாகப் பெறுங்கள்!

கடன், நோய், வறுமை, செய்வினைக் கோளாறுகள், கண் திருஷ்டி, குழந்தையின்மை, குடும்ப பிரட்சினை, செய்தொழில் திருப்தியின்மை, கல்விக்குறைபாடு அனைத்தையும் போக்கி உங்கள் வாழ்வு வளம் பெறுவதற்கென்றே, சற்குரு சாயிநாதரின் திருவடிகளில் சமர்பிக்கப்பட்டு, 108 நாட்கள் தவத்தின் மூலம் உரு ஏற்றப்பட்ட சக்தி வாய்ந்த "சாயி தாயத்து"



* தாயத்தை அணிந்து பலன் பெற "குண்டலினி யோகி" ஸ்ரீராம் சாய் அவர்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு விளக்கம் பெறவும்.

* தனிப்பட்ட முறையில் தாயத்து வேண்டுவோர், தங்கள், பெயர், நட்சத்திரம், பிறந்ததேதி, தெரிவித்து பெற்றுக்கொள்ளலாம்.

தொலைபேசி எண்: 88258 31068.

தாயத்து காணிக்கை: ரூ.1001/- மட்டுமே

பணம் அனுப்பவேண்டிய முகவரி:

V. SRIRAM,
INDIAN BANK,(PURASAIWAKKAM BRANCH), CHENNAI.
A/C.NO: 62 19 48 06 77,
IFS CODE: IDIB000P056.

G- PAY, PHONE PAY, NO: 99418 16692

சாயி மகராஜ் குருவை தேடி
SAI MAHARAJ GURUVAI THEDI
ஆண்டு-6 மலர்-07 டிசம்பர்-2024

வெளியிடுபவர் / ஆசிரியர்
V.ஸ்ரீராம்

கௌரவ ஆசிரியர்
திருமதி.S.ஜெயந்தி ஸ்ரீராம்

விளம்பர பிரிவு
திரு.T. கார்த்திகேயன், கோவை

கௌரவ ஆலோசகர்கள்
திருமதி. S.சாந்தி, சென்னை.
திருமதி.A.சரண்யா ஞானமூர்த்தி, சென்னை.
திருமதி.Dr.கீர்த்தி சௌஜன்யா, சென்னை.
திரு. B.முருகன், சோழவந்தான்.
டாக்டர் செல்வி. S.சௌம்யா, ஊட்டி

இதழ் வடிவமைப்பு
ஜெ.செந்தில்குமாரி

உங்கள் கருத்துக்கள், சிந்தனைகள் மற்றும் விமர்சனங்களை அனுப்ப வேண்டிய முகவரி:-

V.ஸ்ரீராம்
9/1A, பழனியப்பா இரண்டாவது தெரு, அயனாவரம்,
சென்னை - 600023.
செல்: 99418 16692, 88258 31068

கதைகளில் இடம்பெறும் சம்பவங்களும் பெயர்களும் கற்பனையே! இதழில் வெளியாகும் விளம்பரங்கள், விளம்பர கட்டுரைகளின் நம்பகத் தன்மைக்கு நிர்வாகம் பொறுப்பல்ல. விளம்பரங்களை அவரவர் சொந்த பொறுப்பிலேயே அணுக வேண்டுகிறோம்.

அமுத மொழி

அன்புக் குழந்தையே....

மீண்டும் மீண்டும் நான் உனக்கு எனது உறுதியான சத்திய மொழிகளை நினைவுப்படுத்து கின்றேன். இதில் உனக்கு மண் துகள் அளவுகூட சந்தேகம் வரக்கூடாது. அப்படியே உனக்கு சந்தேகம் வந்தால் உன்னுடன் நான் இல்லை என்றல்லவா அர்த்தமாகும்!

எவன் என்னை மிகவும் விரும்பு கிறானோ, அவன் எப்போதும் என்னைக் காண்கிறான். என்னை விட்டு நீங்கினால் இவ்வுலகமே அவனுக்கு சூன்யமாய்த் தோன்றும். எனது கதைகளைத் தவிர பிறவற்றை அவன் பேசுவதில்லை. இடையறாது என்னையே தியானித்து என் நாமத்தையே ஜபம் செய்பவனை நான் மிகவும் விரும்புகிறேன்

முழுமையாக தன்னை என்னி டம் சமர்ப்பித்து என்னையே எப் போதும் எவன் நினைவில் கொண்டி ருக்கிறானோ அவனுக்கு நான் கடன் பட்டதாக உணர்கிறேன். அவனுக்கு விடுதலை அளித்து எனது கடனைத் தீர்ப்பேன். என்னை நினைத்து ஏங்குப வன், நதி கடலுடன் ஒன்றாவது போல், என்னுடன் இரண்டறக் கலக்கிறான்.

பெருமையையும், அகங்காரத்தை யும் விட்டொழித்துவிட்டு, உனது இதயத்தில் அமர்ந்து கொண்டிருக்கிற என்னிடம், பூரணமாக சரணடை! அதற்குப்பின் நீ என்னை எங்கும் தேடிக்கொண்டு போக வேண்டாம். உலகமே உன்னைவிட்டு போனா லும், கவலைப்படாதே! உனக் குண் டான நன்மைகளை செய்யாமல் நான் உன்னை விட்டுப்போக மாட்டேன். இது சத்தியம்.

-பகவான் சீரடி சாய்பாபா.



ஆசிரியர் பக்கம்...

அன்பிற்கினிய சாய் சொந்தங்கள் அனைவருக்கும் வணக்கம்!

பகவான் சாயிநாதரின் அருளால் எழுபத்தி ஏழாவது இதழ் மூலம் சாயி சொந்தங்களாகிய உங்களைச் சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி. சென்ற இதழின் வெளியீட்டு விழா, 03.11.24 ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிக்கு "சாய் தியானாலயா ஆத்ம ஞான பீடத்தில்" (9/1A, பழனியப்பா 2 ஆவது தெரு, அயனாவரம், சென்னை23) மிகச்சிறப்பாக நடைபெற்றது.

காலை 8.00 மணிக்கு சத்சங்கம், தியானத்துடன் துவங்கிய விழாவில், புத்தக வெளியீடு காலை பத்து மணிக்குத் தொடங்கியது. இம்மாத இதழை குருவருள் வேண்டி திரு. அசோக்குமார் சாய்ராம் அவர்கள் வெளியிட, சாயிபக்தர் திரு. ராஜேஷ் அவர்கள் பெற்றுக் கொண்டு சிறப்பித்தார்கள்.

விழாவில் திரு. சுந்தர்சாய் அவர்கள், திரு. ஆசிரியர் அவர்கள் பக்தர்களிடையே சொற் பொழிவாற்றினர். குருவருள் வேண்டி திரு. அசோக்குமார், அவர்கள், திருமதி. தனம், ஆகியோர் தங்களது அனுபவங்களை பக்தர்களிடையே பகிர்ந்து கொண்டனர்.



விழாவிற்கு வந்திருந்த அனை வருக்கும் சாய் தியானாலயா அன்ன தானக் குழுவினர் அன்னதானம் வழங்கினர். புத்தக வெளியீட்டை ஒட்டி இல்லாதோருக்கும், இயலாதோருக்கும் அவர்கள் இருக்கும் இடம் தேடிச்சென்று அன்னதானம் வழங்கப்பட்டது.

நம்முடைய இதழ்பணி, அன்னதானப்பணி, சத்சங்கப்பணி,



அனைத்தும் பகவான் சாயி நாத ரையே சுற்றிச்சுழன்று வருவதை தாங்கள் அறிவீர்கள். ஏனெனில் நமது தாரக மந்திரமே" எல்லாம் சாயி, எல்லாமே சாயி" மட்டும் தான்.

அதன் நோக்கம் யாதெனில் பகவான் சாயிநாதரின் சாஸ னாம்ருத பொன் மொழிகளை ஊன்றி படித்து அவர் கூறியிருக் கும் ஞான யோகத்தைப் பயின்று நமது "ஆத்ம ஞானத்தை" விளங்கிக் கொள்வதும், சாயிநாதரின் புகழைப் பரப்புவதும் மட்டுமே அன்றி வேறொன்றுமில்லை.

நமது காதுகள், சாயியின் பெயரை மட்டுமே கேட்க வேண் டும், நமது வாய் சாயியின் புகழைப் பாடவும், பேசவும் மட்டுமே

செய்ய வேண்டும், நமது கண்கள் சாயியை பார்க்க மட்டுமே உபயோகப்பட வேண்டும். நமது சுவாசம் உள் நுழைவதும், வெளியேறு வதும் சாயி, சாயி என்றே இருக்க வேண்டும். நம்முடைய நாக்கு சாயியின் பிரசாதங் களை மட்டுமே ருசிக்கட்டும்.



சாயியின் அவதார நோக்கம் என்ன என்பதைப்பற்றி தெரிந்து கொள்ள வேண்டுமே தவிர, சாயி யாருடைய அவதாரம் என்ற கருத்து தேவையற்ற ஒன்றாகும். ஏனெனில் அவர் நமது அறியாமையையும், அகங்காரத்தையும் அகற்ற வந்தவர். அவர் யார் என்று தேடுவது நமது அறியாமையையும், அகங் காரத்தையும் வளர்க்கும் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

எனவே சாயியின் புகழை வளர்க்க வேண்டும் என்று நினைப்ப வர்கள் "எதைப்பிடித்தாலும் இறுக்கிப்பிடி" என்ற சாயி நாதரின் திருமொழிகளில் உறுதி கொண்டு அவரையே "இறுக்கிப் பிடித்தவர்களாக" இருக்க வேண் டும் என்பதே எமது அவா. முதலில் நமது கொள்கையில் தெளிவும், ஊக்கமும் இருந்தால் மட்டுமே நாம் செய்யும் செயல் வெற்றியை நோக்கி பயணப்படும்.

எண்ணம், சொல், செயல், மூன்றும் ஒன்றாக இருக்கும் பட்சத் தில் எப்பேர்பட்ட கடினமான காரியம் கூட மிக எளிதாக முடியும் என்பதே நம்பிக்கை, பொறுமை என்ற சாயிநாதரின் சாஸனாம்ருத திருமொழியின் விளக்கமாகும். நாமும் அவ்வழியே நடப்பதற்கு உறுதி ஏற்றுக்கொண்டு நடப்பதே சாயி வழியாகும். எல்லாம் சாயி! எல்லாமே சாயி!

பகவான் சாயிநாதரின் அருளால் அனைவரும் அனைத்து நலன் களும் பெற்று, உலக மாந்தர்கள் அனைவரும் போர், பகை, அச்ச மின்றி ஆரோக்கியத்துடன், மன நிம்மதியுடனும், வாழ வேண்டும் என்று பிரார்த்தித்து நிறைவு செய்கின்றோம். மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்.



வாழ்க வளமுடன்! வாழ்க வையகம்!

– அன்புடன் ஆசிரியர்.

சமத்துவ சாகரம் குரு நானக்

குருநானக், சீக்கிய மதத்தின் நிறுவனர் மற்றும் பத்து சீக்கிய குருக்களுள் முதல் குரு ஆவார். இவர் கபீரின் உற்ற சீடர் ஆவார். இவரது மூத்த மகன் ஸ்ரீ சந்த் சீக்கிய சமயத்தில் உதாசி எனும் சாதுக்கள் பிரிவை நிறுவினார். சீக்கியர்கள், குரு நானக்கை தொடர்ந்து வந்த குருக்கள் அனைவரும், குரு நானக்கின் தெய்வீகத் தன்மை மற்றும் மத அதிகாரம் பெற்றிருப்பதாக நம்புகின்றனர், எனவே அவர்களது பெயருக்குப் பின்னால் "நானக்" கை இணைத்துக் கொள்கின்றனர்.

குரு நானக் ஏப்ரல் 15,1469 அன்று, தற்போது ராய் பொய் டி டல்வாண்டி என வழங்கப்பெறும் கிராமத்தில் ஒரு இந்து மதக் குடும் பத்தில் பிறந்தார். அவர் பிறந்த நாள் "குரு நானக் தேவ் பிரகாஷ் திவாஸ்" எனக் கொண்டாடப் பட்டு வருகிறது. இப்போது அவ்விடம் லாகூர், பாக்கிஸ்தான் அருகில், நன்கான சாஹிப் என அழைக்கப்படுகிறது.

இன்று, இவரது பிறந்த இடம் குருத்வாரா ஜனம் அஸ்தானால் குறிப்பிடப்படுகிறது. சிலர், 20 அக்டோபர், இவர் ஞானம் பெற்ற நாள் என்றும் கருதுகின்றனர். இவரது தந்தை, மேத்தா கல்யாண் தாஸ் பேடி, பிரபலமாக களூ மேத்தா என அழைக்கப்படுகிறார். அந்த பகுதியில், ராய் புலர் பாட்டி என்ற முஸ்லீம் நில உரிமையாளரிடம்




பயிர் வருவாய் கணக்காளராக வேலை செய்தார்.

நானக்கின் தாயார் திரிப்பா தேவி ஆவார். இவரது சகோதரி யான பீபி நானகி தன் சொந்த விருப்பத்தில் ஒரு ஆன்மீக வாதியாக ஆனார். நானகி, தௌலத் கான் லோடி என்பவரிடம் மேலாளராக வேலைச் செய்த ஜெய் ராம் என்பவரை மணந்து, அவர் ஊரான சுல்தான்பூர்க்குச் சென்றார். குரு நானக், தனது மூத்த சகோதரி மீது கொண்ட பற்றாலும், பாரம்பரிய இந்திய வழக்கத்தாலும், தனது சகோதரியுடன் வாழ சுல்தான்பூர் சென்றார்.

இவருக்கு 16 வயதிருக்கும் போது, தௌலத்கான் என்பவரிடம் வேலை கிடைத்தது. அது தான் இவர் வாழ்வின் மிகவும் பயனுள்ள நாட்களாய் அமைந்தது.

இவரது வாழ்க்கைப் பற்றியான விளக்கவுரைகள், ஒரு இளம் வயதிலேயே இவர் பெற்ற மலர்ச்சி, விழிப்புணர்வு ஆகிய விவரங்களை




கொடுக்கிறது. ஐந்து வயதில், குரு நானக் தெய்வீக பாடங்களை கற்பதில் விருப்பமாக இருந்தார்.

இவரது தந்தை, களூ மேத்தா, வழக்கத்தைப் போல கிராம பள்ளி யில் இவரை சேர்த்தார். ஒரு குழந் தையாக இவர், தன் ஆசிரியரே வியக்கும் வண்ணம் அகர வரிசை யின் முதல் எழுத்து, அரேபிய வழக்கில் கணித ஒன்றை ஒத்து இருப்பதை வைத்து கடவுள் ஒன்று என்ற வாதத்தை முன்வைத்தார்.

குருநானக் பிறந்த உடன் அவர் ஜாதகத்தை எழுத வந்த ஒரு ஜோதிடர், குழந்தையைப் பார்த்தவுடன் கைகளைக் கூப்பி அவரை வழிபட்டு, "நான் இளம் குரு நானக்கை பெரியவனாக காண முடியாதே என்று தான் வருந்து கிறேன்" என்று கூறினாராம்.

ராய் புலர் பாட்டியும், குரு நானக் சகோதரி பீபி நானகி, இவரிடம் தெய்வீக குணங்கள் இருப்பதை அறிந்த முதல் நபர்கள் ஆவர். அவர்கள், இவருக்கு மேலும் ஊக்கம் அளித்து படிப்பு மற்றும் பயணம் தொடர துணைபுரிந்தனர். சீக்கிய பாரம்பரியம் படி, கி.பி.1499 அளவில், 30 வயதில், இவர் ஞானம் பெற்றதாக கூறுப்படுகின்றது.

இவர் தனது 30 வது வயதில் அருகில் இருந்த ஓடையினுள் சென்று நீருள் முழ்கிவிட்டார். வெகுநேரம் தேடியும் குருநானக்கின் உடலை கண்டுபிடிக்க முடியாத ஆட்கள், பெயின் காளி என்ற உள்ளூர் ஓடை அருகே அவரது உடைகளை மட்டும் கண்டுபிடித்து



எடுத்து வந்தனர். ஊர் மக்கள், இவர் ஓடையில் மூழ்கி இறந்து போனார் என்று கருதினர்.

ஆனால், மூன்று நாட்களுக்கு பிறகு, குரு நானக் அதே ஓடையில் இருந்து அமைதியாக எழுந்து வந்தார். அன்று முழுவதும் அமைதி யாக இருந்தவர் அடுத்த நாள்தான் பேசினார் "யாருடைய பாதையை நான் பின்பற்ற வேண்டும் என்று நான் தெளிவடைந்துவிட்டேன். இந்து மத பாதையும் அல்ல, முஸ்லிம் மத பாதையும் அல்ல, நான் பின்பற்ற வேண்டிய பாதை கடவுளின் பாதையாகும் " என்றார்.

பிறகு, குரு நானக், தான் கடவுளின் நீதிமன்றத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டதாக தெரிவித்தார். அங்கு, தனக்கு தேன் நிரப்பப்பட்ட ஒரு பாத்திரம் வழங்கப்பட்டு, "இது கடவுளின் ஆற்றல் நிறப்பப் பட்ட கோப்பை, இதை குடி, நான் உன்னுடன் இருக்கிறேன், நான் உன்னை ஆசீர்வதித்து உன்னை உயர்த்துகிறேன். யார் உன்னை நினைக்கிறார்களோ, அவர்கள் என் ஆசீர்வாதம் பெறுவர்" என்று கடவுள் சொன்னதாக அவை யினரிடம் சொன்னர்.


இந்நிகழ்வுக்குப் பிறகு இவர் "குரு" என அழைக்கப்பட்டார். வி ரை வி லே யே சீ க் கி ய ம் தோன்றியது. இவரின் பயணம் பற்றிய துல்லியமான கணக்குகள் விவாதத்திற்குரியதாகவே உள்ளது என்றாலும், இவர் பரவலாக நான்கு முறை, உலகம் முழ்வதும் ஆயிரக்கணக்கான கிலோமீட்டர் பயணம் செய்திருக்கின்றார்.

அதாவது, வங்காளம், அசாம் நோக்கி கிழக்கு முதல் சுற்றும், இரண்டாம் பயணம் தெற்கு தமிழ்நாடுக்கும், காஷ்மீர், லடாக், திபெத் நோக்கி மூன்றாவது பயணம் வடக்கு நோக்கியும், அரேபிய தீபகற்பத்தில் உள்ள பாக்தாத், மெக்கா மற்றும் மதினா நோக்கி இறுதி பயணம் சென்றார்.

குரு நானக்,தனது 16 வயதில் சுலக்கினி என்பவரை திருமணம் செய்து கொண்டார். இவருடைய திருமணம் பட்டாலா நகரத்தில் நடைபெற்றது. பெண் வீட்டார், சுல்தான்பூர் லோதி நகரத்தில் இருந்து வந்தனர். இவர்களுக்கு சிரீசந்த், இலட்சுமிசந்த் என்ற இரண்டு குழந்தைகள் பிறந்தனர்.

குரு நானக் தனக்கு அடுத்து, குருவாக பை லென்னா என்பவரை "குரு ஆங்க்" என மறுபெயரிட்டு நியமித்தார். விரைவில், அடுத்த குரு என பாய் லென்னா

பிரகடனப்படுத்தியதுக்கு பிறகு, குரு நானக் தனது 70 வயதில், தற்போதைய பாக்கிஸ்தான் நாட்டின் கர்த்தார் பூரில், 22 செப்டம்பர் 1539 அன்று கடவுளுடன் இணைந்தார்.



குரு நானக்கின் போதனைகள் குர்முகியில் பதிவுச் செய்யப்பட்டதைப் போல, சீக்கிய மத இலக்கியமான குரு கிரந்த் சாஹிப்பில் காணலாம். இதில் சில பொதுவான கொள்கைகள் அறிந்து கொள்ள வேண்டியவை. புரிந்துகொள்ளமுடியாத உருவற்ற, அழிவில்லாத, அனைத்து முக்கிய மதங்களிலும் குறிப்பிடப்படும் கடவுள் ஒருவரே.

குரு நானக், "தான்" என்ற எண்ணத்தால் விளையும் ஆபத்துகளை சுட்டிக்காட்டி, தன் பக்தர்களை "கடவுள்"ன் நாமத்தால் வழிபட வேண்டும் என்றும், சமயங்களில் குருவின் வழிகாட்டலின் படி செயல் பட வேண்டும் என்றார்.ஆனால் அந்த வழிபாடுகள் தன்னலமற்றதாக இருக்க வேண்டும் இவை, கடவுளின் விருப்பப்படியே அனைத்தும் நடக்கும். அவர் இல்லையேல் இவ்வுலகில் எதுவும் இல்லை, என்ற கொள்கையை தழுவியது.

குரு நானக், இந்த மனித நேயத்தில் பரவலாக உள்ள மற்றும் சமய நடவடிக்கைகளை கூட வீணாக்க முடிந்த , பாசாங்குத்தனம் மற்றும் பொய்யான பாசம் குறித்து எச்சரித்தார்.நானக்கை பொறுத்த வரை, துறவி நடைமுறைகளை புறக்கணித்து, இல்லற வாழ்வில் ஈடுப்பட்டு தெய்வப் பற்று பெற்று வாழ வேண்டும் என அறிவுறுத்துகிறார்.

பிரபல பாரம்பரியத்தில், குரு நானக்கின் போதனைகள் மூன்று வழிகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

ஒன்று, தேவை உள்ளவர்களுக்கு உதவி செய்தல், மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளுதல். இரண்டு சுரண்டல் அல்லது மோசடி இல்லாமல், நேர்மையாக ஒரு வழ்க்கையை உருவாக்கிக் கொள்ளுதல்.

மூன்று, பரிசுத்த நாமத்தை ஜபித்தல், இதனால் எல்லா நேரங்களிலும் கடவுளை நினைவில் கொள்ளுதல்.


குரு நானக், கடவுளின் நாமத்தால் செய்யப்படும் நாமசெப வழிபாட்டுக்கு மிகப்பெரிய முக்கியத்துவம் தந்தார். ஒரு மனிதன், ஞானம் பெற்ற குருவின் வழிகாட்டுதலின் படி நடக்க வேண்டும் என்றும், தன் மனதிற்குத் தோன்றியவாறு சுய புத்தியின் அடிப்படையில் நடக்கக் கூடாது என்றும், இல்லையேல், வாழ்க்கை ஏமாற்றத்திற்கு மட்டுமே வழிவகுக்கும் என்றும் போதித்தார்.

●

தொடர் - 18


திருவருள் தேடி

ஓம் சாய்ராம். சாய் அன்பர் களுக்கு சுந்தர் சாய் சிரம் தாழ்த்தி கரம் குவித்து வணக்கங்கள். நவம்பர் மாத திருவருள் தேடியில், நாம் சற்றும் எதிர்பாராத விதமாய் வெளிநாட்டில் சாய் பகவான் லீலையாக பர்த்தி சாயியின் பிறந்தநாள் சத்சங்கத்திற்கு நாம் சென்றதைப் பற்றி எழுதியிருந்தோம். இந்த அனுபவங்களை நாம் பகிர்ந்த சமயம் கூட நாம் எதிர்பாராமல் தற்செயலாய் பகவான் பிறந்த மாதமான நவம்பர் மாத இதழில் வெளிவந்ததே என வியந்து சாய்ராம் பதம் பணிந்து தொடர்வோம்.



எனது டிரைவர், என்னுடன் வேலை செய்பவரின் மாமா மற்றும் பகவானுடைய திருவுருவம் பொறித்த கலை வடிவத்துடன் ரஷ்யப் பெண்மணியான சத்யசாய் பகவானின் தீவிர பக்தையின் இல்லத்தை நாங்கள் அடைந்தவுடன், மிகவும் பெருமையாக உணர்ச்சி வெள்ளத்துடன் அவர் நம்மை வர வேற்று அங்கு கூடியிருந்த நண்பர் களுக்கெல்லாம் அறி முகம் செய்து வைத்தார்.

அது ஒரு தெய்வீக அனுபவம் என்பதை மிக ஆழமாக உணர வைத்தார் நமது சத்ய சாய் பகவான். எப்படியென்றால் நானும் சரி, அந்த பத்தையும் சரி மிகவும் உச்சக்கட்ட உணர்ச்சிப் பெருக்கால் தாக்கப்பட்டு கண்கள் கண்ணீர் மழையாய் பொழிந்தது. ஆம் எனக்கோ இப்படி ஓர் வித்தியாசமான ஒரு வெளிநாட்டிலும் நாம் பகவானுடைய பிறந்த நாளை கொண்டாட கிடைத்த வாய்ப்பு கண்ணீராய், நன்றி பெருக்காய் வெளிவந்தது.



சுந்தர் சாய்

அந்த பக்தைக்கோ இத்தகைய ஒரு

சத்சங்கத்திற்கு இந்தியாவிலிருந்து சற்றும் எதிர்பாராத அழையா விருந்தாளியாய் சாய்பகவானின் பிரதிநிதியாக ஒரு பக்தர் வந்திருப்பது ஒரு பெரிய ஆசிர்வாதம் அல்லவா? அதை நினைத்து நன்றி பெருக்குடன் ஆனந்தக் கண்ணீர் விட்டார்.

மிகவும் பிரமாதமாக பஜன், தாள வாத்யங்களுடன் அழகாய் அமைந்தது. உண்மையைச் சொல்ல வேண்டும் அல்லவா? பஜனைப் பாடல்கள் மற்றும் தாள வாத்தியங்கள் எல்லாமே அயல்நாட்டு பக்தர்களால் இசைக்கப் பட்டது. இந்த முட்டாள்களுக்குப் பாட்டும் தெரியாது, இசைக்கவும் தெரியாது. வெறும் கண்ணீரால் மட்டுமே வழிபட முடிந்தது.


சத்சங்கம் முடிந்ததும் என் உள்ளுணர்வில் ஏதேதோ மாற்றங்கள். இறைசக்தி நம்மை அரவணைத்து தேற்றுவதாக உணர்ந்தேன். அடுத்த நாள் அது உண்மையானது. பகவானுடைய கிருபையால் அடுத்த நாள் நான் கஸகஸ்தான்,'அல்மாட்டா' நகரம் செல்ல அந்த நாட்டிலிருந்து விசா கிடைத்தது. உடனே அங்குள்ள தூதரகம் சென்று விசாவைப் பெற்றுக் கொண்டு சாய் பகவானுக்கு நன்றி தெரிவித்து அலுவலகம் திரும்பினேன். இந்த மாற்றம் எல்லாமே சத்குருவின் ஏற்பாடுதான் என்பது உறுதியாக உணர்ந்தேன்.

விசாவை கஸகஸ்தான் அலுவலகத்திற்கு அனுப்பிய வுடன் அங்கிருந்து நமக்கு அதிகாரப்பூர்வமான மாற்றல் உத்தரவை அனுப்பி வைத்தார்கள். தற்சமயம் நாம் வேலை செய்யும் அலுவலகத்தில் முடிக்க வேண்டிய வேலைகளை விரைவாக முடித்து, நமது சொந்த அலுவல்களையும் முடித்துக் கொண்டு ஓரிரு வாரங்களில் அந்த நாட்டிற்கு குடிபெயர வேண்டிய விஷயங்களில் கவனம் செலுத்தினேன்.



எனது சி.இ.ஓ அவர்களும் அந்த நேரத்தில் என்னை தொடர்பு கொண்டு எல்லா ஏற்பாடுகளும் சரிவர செய்ய எனக்கு சகல விதங்களிலும் உதவி செய்தார். சாய் பகவான் அருட்கடாட்சத்தினால் Baku ஆபிஸிலிருந்த கிளம்புகின்ற அந்த கடைசி வேலை நாளில் நம்மை அடக்கி ஆள நினைத்த அந்த நாட்டு லேடி தொலை பேசியில் தொடர்பு கொண்டு நம்மிடம் வாழ்த்துக்களை தெரிவித்ததுடன் தன்னுடன் சேர்ந்து வேலை செய்யாமல் இருந்ததை குறிப்பிட்டு வருத்தம் தெரிவித்தார்.

நானும் ஒரு சம்பிரதாயமாக எல்லாம் இறைவன் சித்தம் என்று கூறி அவருடைய வாழ்த்துக்களுக்கு நன்றி தெரிவித்து ஆபிஸிலிருந்து வெளியேறினேன். அப்பபோதுதான் நான் கடைசி நாள் வரை நாம் இந்த ஆபத்தான கூட்டணியில் இருந்திருக்கின்றோம். ஆனாலும் பாபாவால் காப்பாற்றப்



பட்டிருக்கிறோம் என்பதை உணர்ந்தேன்.

நல்லபடியாக தப்பினோம் என இன்றளவும் எண்ணி நம் சாய்ராமுக்கு நன்றி தெரிவிக்கிறேன். இன்றும் நமக்கு நல்ல ஒரு நட்பு வட்டாரம் தொடர்பிலிருப்பது நம் வாழ்வின் சாதனை என்னு மளவுக்கு மரியாதை மிகுந்த ஒரு நற்பெயர் கிடைத்தது ஒரு மகிழ்ச்சி. அத்துடன் நாம் Bakuவில் பணியில் இருந்த காலத்திலேயே இரண்டு மாத லீவு நாட்களில் எனது குடும்பத்துடன் மகன், மனைவி என நம்முடன் வந்து தங்கியிருந்து, சுற்றுலா பயணமாக சில இடங்களுக்குச் சென்று மகிழ்வுடன் அனுபவித்து இந்தியா திரும்பினார்கள்.

அந்த வகையிலும் நம்மைப் பொறுத்தவரை எல்லாம் மிகவும் திருப்திகரமாய் அமைந்தது. உடன் வேலை செய்த இந்திய நண்பர்கள் உடன் வந்து வழியனுப்ப நாம் நமது புதிய கர்ம பூமியான கஸக்ஸ்தான் நாட்டிற்கு பயணம் தொட்ங்கினோம்.

வருடம் 2004 டிசம்பர் மாதம் கஸக்ஸ்தான் நாட்டிலுள்ள அல்மாட்டா எனும் நகரிலுள்ள அலுவலகத்தில் வந்து வேலையில் சேர்ந்தோம். இங்கு பனிபெய்ய ஆரம்பித்துவிட்டது. அதிகபட்சமாக 29 டிகிரி வரையில் உறைபனி மிகுந்த நாடு. பாகுவில் 7வரை, டாஷ்கெண்டில் 16 வரை அனுபவமிருந்தாலும், இது நமக்கு ஒரு கடும் குளிர் நாடாக உணர்ந்தோம். மிகவும் கவனத்துடன் நிதானமாக நடக்க வேண்டும். 2 – 3 முறை வழுக்கி விழுந்த அனுபவங்களும் உண்டு.

எப்பொழுதும் கையில் உறையுடனும், கால்களில் உறைபனியில் நடக்க உதவும் பூட்ஸ் அணிந்தும் இருக்க வேண்டும். திடீர் திடீரென ஒரு வைரஸ் கிருமியால் மூக்கெல்லாம் சிவந்து நீர் ஒழுக ஜுரம் ஒன்று தாக்கும். ஆஸ்பத்திரி முழுவதும் நிரம்பி வழியும் நோயாளிகள் கூட்டம். மூக்கு நுனியிலிருந்து புறப்படும் நீர் வெளிவந்த உடனேயே பனித்துளியாய் உறைந்து மீசையின் மேல் படரும். இவையெல்லாம் நமக்கோர் புதிய அனுபவம். வீட்டில் ஹீட்டர் இல்லாமல் இருக்க முடியாது. பைப் மூலம் எரிவாயு சப்ளை செய்யப்படும். அது தவிர மின்சார அடுப்பும் உண்டு.

தற்காலிகமாய் அங்கு சென்ற வுடன் சென்னையைச் சேர்ந்த ஒரு நண்பருடன் தங்கினேன். அவரும் தனியாகவே தங்கியிருந்ததுடன்

நம் அலுவலகத்தில் வேலை யிலிருந்தார். விசாலமான அறிவு, ஆன்மீகத்தில் நாட்டம் போன்று ஓர் ஒத்திசைவுடன் இருந்ததால் நமக்கும் அனுகூலமாக அமைந்தது. அவரும் நம்முடன் அன்புடன் பழகினார். ஸ்ரீ வித்யா தீட்சை பெற்றவராக இருந்தார்.

இதற்கிடையில் எனக்கென்று ஒரு தனி வீடு தேடும் படலம் ஆரம்பித்தது. அங்கு முக்கியமாக பெண்கள் தான் வீட்டின் சொந்தக் காரர்களாக இருந்தார்கள். மேலும் இந்தியர்களுக்கென்று வீடு வாட கைக்கு கொடுப்பதில் இரண்டாம் பட்சமாக நம்மை அவர்கள் நோக்குகிறார்கள் என்றும் தெரிந்து கொண்டதால் கொஞ்சம் அதிக முனைப்புடன் வீடு தேட வேண்டி யிருந்தது.

ஒருமுறை ஏஜென்ட் மூலம் ஓர் பெண்மணியின் குடியிருப்பை பார்த்துவிட்டு அவரிடம் நமக்கு அந்த வீடு பிடித்திருப்பதாகவும் வாடகை மற்றும் இதர நிபந்தனை களைப் பற்றி பேசுகையில் அந்த அயல்நாட்டு இஸ்லாமிய பெண்மணி என்னிடம் உங்களுக்கு சாய்பாபாவைத் தெரியுமா என்று கேட்டவுடன் நான் அதிர்ந்து போனேன்.

நாமறிந்த வகையில் எந்த விதமான சம்பந்தமுமில்லாமல் ஓர் அந்நிய நாட்டு இஸ்லாமிய மதத் தைச் சார்ந்தவர். இதுபோல் கேட் கவே எனக்குள் ஓர் ஆச்சரியமான இனம்புரியாத அதிர்வு ஏறபட்டு நானும் அவரிடம் சத்ய சாய் பக வானைப் பற்றிய ஓரிரு வார்த்தை பகிர்ந்து கொண்டதுடன் நம்

பாபாவின் செய்தி

செய்தி தான் முக்கியமே தவிர சொல்பவர் அல்ல! அந்தச் செய்தி பாபாவின் ஞானத்தை சுமந்து கொண்டு வருகிறதா? என்பதை மட்டுமே நீங்கள் கவனிக்க வேண்டும்! பாபா யார் மூலமும் நம்மை பக்குவப்படுத்துவார், எந்த சூழ்நிலை வழியாகவும் நம்மை ஞானத்திற்கு அழைத்துச் செல்வார்! விறகடுப்போ, கேஸ் அடுப்போ, மின்சார அடுப்போ, சமைப்பதே முக்கியம்! எல்லாமே நெருப்பின் அவதாரங்களே!

இறைவனின் செய்தி என்பது நம்மை தட்டி எழுப்புமே தவிர தாலாட்டு பாடிக் கொண்டிருப்பதில்லை!



ஏனெனில் நீங்கள் ஏற்கனவே தூங்கிக் கொண்டு இருக்கின்றீர்கள். உங்க ளுக்கு தாலாட்டு தேவை இல்லை! அக விழிப்பு அடையச் செய்வதே பாபாவின் செய்திகள்! அச் செய்திகள் எப்போதும் காற்றில் தவழ்ந்து கொண்டுதான்

சட்டைப் பையிலிருந்து சிறிய பாபா போட்டோவை அவரிடம் காட்ட அவரும் அதை நம் கையிலிருந்து வாங்கி உற்று நோக்கவே எனக்கு மிகவும் வினோதமாக இருந்தது.

அவர்கள் மதகோட்பாட்டின்படி அவர்கள் உருவ வழிபாட்டை ஆதரிப்பவர்கள் இல்லை என அறிவேன். மேலும் இந்த ரஷ்ய கூட்டுறவு நாடுகளில் பர்தா அணிந்த இஸ்லாமியர்களைப் பார்ப்பது மிக அரிது. அவர்கள் நாகரீக வாழ்க்கை முறையில் ஐரோப்பிய நாடுகளை மிகவும் ரசித்து ஆதரிப்பவர்கள். அவர் உடனே என்னிடம் சட்டென்று இந்தப் படத்தை நான் வைத்துக் கொள்ளலாமா? எனக் கேட்க உடனே நான் மிகுந்த விருப்பத்துடன் அவரிடம் தாராளமாக வைத்துக் கொள்ளுங்கள் என்றேன்.

அவரும் அவரது குடியிருப்பை எனக்கு வாடகைக்குத் தர ஒப்புக்கொண்டார். அது ஓரளவு விசாலமான 8 ஆவது மாடியில் முக்கியமான சாலைகளின் சந்திப்பில் அமைந்த வீடு. எனவே உடன் ஒப்புக் கொண்டு அவர் கேட்ட அட்வான்ஸ் தொகையை அவரிடம் கொடுத்து சாவியை வாங்கிக் கொண்டு எனது நண்பரின் குடியிருப்புக்கு வந்து சேர்ந்தேன்.

ஒரே நேரத்தில் மனதில் வீடு கிடைத்த சந்தோஷம், ஆனால் அதை முழுமையாக உணர முடியாமல் நம்மிடம் இருந்த ஒரே ஒரு பாக்கெட் சைஸ் சாய்பாபா படத்தைக் கொடுத்து விட்டோமே! இது இந்திய நாடு அல்லவே, உடனே சென்று வேறு ஒரு படத்தை வாங்கி வைத்துக் கொள்ள வேண்டும் என்கிற மனபாரம்.

மேலும் திடீரென்று நமது சாய்ராம் பற்றிய பேச்சு முளைத்தது எப்படி என குழம்ப, எனக்கு இரண்டு விஷயங்களில் தெளிவு கிட்டியது. ஒன்று அந்த நாட்டின் அதிபர் 'நசர்பயேவ்' (Nazarbayev) என்பவர் சத்ய சாய் பாபாவின் பக்தர் என கேள்விப்பட்டேன். இரண்டாவது நம்மிடம் இருந்த போட்டோ அவரிடம் சென்றப்பின் வந்த ஏக்கம். அதற்கான பதிலை அடுத்த இதழில் அறிவோம்.

குரு வாழ்க! குருவே துணை! எல்லாம் சாயி! எல்லாமுமே சாயி! ●

இருக்கின்றன. ஆனால் நமது செவிகளோ ஆசை எனும் புதை மணலின் அடியில் கிடக்கிறது!

தேவை நமக்கு சற்று விழிப் புணர்வே! இதில் மிக முக்கியமாக நாம் கவனிக்க வேண்டியது, செய்தி வேறு, பாபா வேறல்ல! நெருப்பு வேறு வெளிச்சம் வேறல்ல! ஞானம் வேறு மோட்சம் வேறல்ல! பாபாவின் செய்திகளை நாம் அன்றாட வாழ்க்கையில் கடைபிடிக்க ஆரம்பித்தால், அது மட்டுமே பாபாவோடு வாழ்வதற்குச் சமம்! அது தான் ஒட்டு மொத்த மனித குலத்தின் ஒரே வாழ்க்கையும் கூட! நம்மை தேடிவரும் சாயி செய்திக்காக நாம் செலுத்தும் நன்றி என்பது, "அதை கடைபிடிப்பது மட்டுமே."

தொடர் - 41



அதிதேவதை

ஸ்ரீ ராதாகிருஷ்ண மாயியின் புண்ய திருவடி என்று ஷீரடியில் பட்டதோ அன்றே ஷீரடி பிருந்தாவனமாக திகழ ஆரம்பித்தது. பாகவத தர்மமும், பிரேம பக்தியும் சத்குருவின் அனுக்கிரகம் இன்றி எவ்வாறு கிடைக்கும். ஈஸ்வரன் குரு ஆத்மா மூன்றும் ஒன்றே ஆகும்.

ஷீரடியில் ஒரு நாள் காலை நேரத்தில் சாயிநாதரை தரிசிக்க பாபாவின் அடியவர்கள் வந்தனர். பாபாவோ "நீங்கள் எல்லோரும் ஆயியின் சாலாவிற்கு செல்லுங்கள்" அங்கு சென்று சத்சங்கத்தில் கலந்து கொண்டு புண்ணியம் என்ற பைசாக்களை சம்பாதியுங்கள் என்றார்.

பிறகு பாபாவின் அனுமதி பெற்று தீட்சித் மற்றும் பிற அடியார்கள் இராதாகிருஷ்ண மாயியின் பிருந்தாவனத்திற்குச் சென்றனர். இராதாகிருஷ்ணமாயியும் தனக்கே உரிய ஆசனத்தில் அமர்ந்து அடியார்களுக்கு வந்தனம் செய்து, குரு வணக்கம் செலுத்தி

சாய் சரவணன்

குருபக்தியை, குருவிடம் செய்ய வேண்டிய நவவித பக்தியை விவரமாக உபதேசிக்க ஆரம்பித்தாள்.வாருங்கள் நாமும் ஆயியின் முன் அமர்ந்து சிரத்தையுடன் கேட்போம்.

ஒரே பேரறிவு தான் பிரபஞ்சமாகவும், ஜீவராசிகளாகவும் தோன்றி மறைகிறது. பிரபஞ்சம் எனும் தோற்றத்தை நீக்கினால் மிஞ்சி இருப்பது சுத்தமான பேரறிவாகிய பரமாத்மா மட்டுமே! பிரபஞ்சம் ஜீவராசிகள் என்ற தோற்றங்களும், பேத புத்தியும் நம்முள் இருக்கும் வரை பலவிதமான காரியங்கள் ஏற்படுகின்றன.

நாம் இவற்றை எல்லாம் கடந்து அனைத்திற்கும் மேலான பரம் பொருளாகிய சாயியை அடைந்து விட்டால் முடிவில் அறிகிறவன், அறிவு, அறியப் படும் பொருள் என மூன்றும் ஒன்றாகி பேதங்கள் காணாது போய் மறைந்துவிடும். இறுதியில் "ஆத்மசாட்சாத்காரம்" கிடைத்துவிடும்.



ஆனால் நமக்கு இந்நிலை அனுபவப் பூர்வமாக கிடைக்க வேண்டுமாயின் முக்தி என்ற நிலையை நாம் அடைய தடையாக இருக்கும் எல்லாவித பற்றுகளையும் விட்டுவிட வேண்டும். எதன் மீது பற்று வைத்தால் எல்லா பற்றுகளும் அறுந்து போகுமோ அந்த சத்குருவின் திருவடியில் பற்றுதல் கொள்ள வேண்டும்.

பகவானின் அருளால் ஒருவனுக்கு சத்குரு கிடைப்பார். அந்த சத்குருவிடம் சங்கம் வைத்து சரணாகதி அடைபவன் குருகிருபையால் முக்தியை அடைந்து விடுவான். குரு கிருபை ஒன்றினாலேயே பகவத் பக்தியும், பகவத் தியானமும் ஏற்படும். அப்பேர்பட்ட சத்குரு சாய்நாதரிடம் குருபக்தியில்லாது எதையும் அடைய இயலாது.

அப்படிப்பட்ட சாயிநாத பிரபுவிடம் எப்படி பக்தி செலுத்துவது எனக்கேட்டால், என் மானசீக குருவான ஏகநாதரின் அருளால் நான் கற்றுக்கொண்ட "சத்குருவிடம் நவவிதபக்தியை" செலுத்தும் வழியைக் கூறுகிறேன் கேளுங்கள். இந்த நவவிதபக்தியை "ஸ்ரீ நிவர்த்தி நாதர் தனது சகோதரனும், சிஷ்யனும் ஆன ஸ்ரீ ஞானதேவருக்கு உபதேசித்தார்.

ஸ்ரீ ஞானதேவர் தனது "ஞானேஸ்வரி" என்ற கீதையை உலகிற்கு அளித்தார், அதிலிருந்து

நேரடியாக பைடன் ஸ்ரீ ஏகநாதர் அவர்கள் யாவரும் அறியும் வண்ணம் உபதேசித்தார். அவரிட மிருந்து நான் கற்றேன். நவவித பக்தியின் இலக்கணம் பகவானைச் சார்ந்த பக்தி மற்றும் குருநாதரைச் சார்ந்த பக்தி. முடிவைக் கண்டால் இரண்டும் ஒன்று என நன்கு புரியும். இப்போது நாம் நம் குருவை சார்ந்த நவவிதபக்தியின் லட்சணத்தை குருவின் அருளால் அனுபவிப்போம்.

குருவின் லீலைகளை கேட்டல், குருவின் மகத்துவத்தை பாடுதலும் வேண்டுதலும், குருவைப் பற்றி கேட்ட லீலைகளை



நினைவூட்டி கொள்ளுதல், குருவின் திருவடிக்குச் சேவைகளைச் செய்யுதல், குருவின் திருவடிக்கான பூஜை, குருவை பகவானாக பாவித்து வணங்குதல், குருவிற்கு தன்னலம் கருதாது சேவை செய்தல், குருவோடு நட்பு பாராட்டுதல், தன்னையே குருவிற்கு பூர்ணமாக தந்து விடுதல்.குரு உயிரோடு இருந்தாலும் சரி, இறந்தாலும்சரி குருசேவையை தொடர்ந்து கல்ப கல்பமாய் செய்துக் கொண்டிருப்பது, இரவோ, பகலோ எதையும் பாராது சேவையில் கவனம் செலுத்திய வண்ணம் காணப்படுவதும், ஸ்ரீ குரு தன் வாயைத் திறந்து ஏதாவது செய் என கூறினால் உற்சாகம் பொங்க, ஆகாயத்தை விட உயர்ந்து நின்று எல்லா காரியங்களையும் தனித்தே செய்து முடிப்பது,குரு சேவை செய்வதில் தேகத்தோடு மனமானது பந்தயம் போடும்.

குருவின் சம்பந்தத்தால் உத்தம குலத்தில் பிறந்தவனாய் இருப்பான். குருசேவை செய்ய வேண்டுமென்னும் ஆசையால் சதா விசாரம் கொண்டவனாய் இருப்பான். குருவின் சம்பிரதாயமே, நித்ய கர்மானுஷ்டமாகவும், தர்மமாகவும் கருதுவான். அவனுக்கு குருவே சேத்ரம், பரதேவதை, தகப்பன், குருசேவையே ஸத்கதி, ஸ்ரீ குருவின் வாயிலிற் கிடப்பதே சர்வவிதமான பாக்யம் ஆகும். குருசேவை செய்வோரை சகோதரர்களாய் பாவிப்பான்.

அவனது நாக்கு சதா குரு நாமத்தில் ருசித்திருக்கும். குருவின் வாக்யத்தை தவிர வேறு சாஸ்திரத்தை தொடமாட்டான். குருவின் பாத தீர்த்த ஜலம் பருகும் போது மூன்று உலகத்தில் உள்ள உத்தம தீர்த்தத்தை பருகுவதாக பாவிப்பான். ஸ்ரீ குருவின் எச்சில் பிரசாதம் அவனுக்கு கிடைத்தால் அதற்கு முன் சமாதி சுகம் அல்பமாய் பக்தனுக்கு தோன்றும்.

இவ்வகை பக்தி ஆத்ம நிவேதன பக்தி ஆகும். இதில் குருவும் பக்தனும் இரண்டறக்கலந்து ஒன்றாக காணப்படுவர். இப்பக்தியைப் போன்ற பக்தி நமக்கும் வந்திட

சாயிநாதரை வேண்டி நிற்போம். இதுவே சத்குருநாதருக்கான நவவித பக்தியின் லட்சணம் ஆகும்.

ஒரு குருபக்தனின் உண்மையான அடையாளத்தை நாம் இதில் இருந்து அறிந்து கொள்ளலாம். நம் யாவருக்கும் சாயிநாதரின் அருள் கிட்டட்டும். ஏனெனில் அவரே ஆட்டுவிக்கிறார். நாம் ஆடுகிறோம். பிறந்த பயனைத் தருவது குருசேவை, குருபக்தி. இது எளிதில் நமக்கு பிராப்தம் ஆகாது. எனினும் குருவின் அருள் இருந்தால் எல்லாம் நடக்கும். இதோடு இந்த சத்சங்கத்தை முடித்துக் கொள்வோம் என இராதாகிருஷ்ணமாயி கூறினாள்.

எல்லோரும் அன்னையை பார்த்த வண்ணமும், குருபக்தியின் லட்சணத்தை கேட்டதன் வாயிலாக தன்னையே குருவிடம் அர்பணித்த பாவத்தோடு அமர்ந்திருந்தனர். பிறகு தன்னிலைக்கு மீண்டு வந்து அன்னைக்கு நன்றி சொல்லி துவாரகாமாயிக்கு சென்றனர். சாயிநாதரின் அருள்பெற்று அவரவர் இல்லத்திற்கு திரும்பினர்.

தீட்சித் அவர்கள், ஆயியின் வாக்கினாலும், பாபாவிற்கு ஆயி செய்யும் ஒப்பற்ற குரு சேவையிலும் நவவிதபக்தி கலந்திருப் பதைக் கண்டார். ஆகவே அவருடைய மனமானது குருபக்தி, குருசேவை இரண்டிலும் தன்னை முழுமையாக அர்பணிக்க ஆயத்தம் ஆனார். இந்த தாக்கமானது தீட்சித் அவர்களை ஆட்கொண்டு ஷீரடியிலேயே ஒரு வாடா கட்டிக்கொண்டு சாயிநாதருடைய சேவை யிலேயே தன் காலத்தைக் கடத்தி விடலாம் என்ற எண்ணத்திற்கு வந்து விட்டார்.

பிறகு மனதில் உதித்த எண்ணத்தை தீட்சித் அவர்கள் சாயிநாதரிடம் கூற பாபாவோ வாடா கட்ட அனுமதியும் தந்து விட்டார். அனுமதி கிடைத்த மாத்திரத்தில் ஷீரடியில் ஓர் இடத்தை விலைக்கு வாங்கி, 1910ம் வருடம் டிசம்பர் 10ம் நாள் அன்று தீட்சித் வாடா கட்டுவதற்கான அடிக்கல் நாட்டுவிழா பாபாவின் முன்னிலையில் சிறப்பாக நடந்தது.

இப்படியாக அடியார்களின் மனதில் இராதாகிருஷ்ணமாயி குருசேவையின் மகத்துவத்தையும், சேவை செய்யும் மார்க்கமானது கடைமுடிவாக கருணாமூர்த்தியான சாயிநாதரின் திருவடியோடு இரண்டறக் கலக்கும் என யாவரும் உணரும்படி வாழ்ந்தும், பிறர் வாழவும் கற்றுத் தந்தாள்.

ஆதலால் தான் தீட்சித் அவர்கள் ஆயிக்கு "ஆச்சார்யாள்" எனும் பட்டத்தை தந்தார். ஆயி நவபக்தியின் சாராம்சத்தை பூர்ணமாக அனுபவித்து எதை அடைய வேண்டுமோ (சாயி நாதரை) அதை அடைந்தபின் பிறரும் அதை (சாயிநாதரை) அடையும் படியான மார்க்கத்தை அன்று வாழ்ந்த பாபாவின் அடியார்களுக்கு மட்டுமல்ல இன்று வாழும் பாபாவின் பக்தர்களுக்கும் தன் வாழ்வையே சமர்பணம் செய்திருக்கின்றாள். சாயிநாதருடைய பூரண அருள் ஆற்றல் இராதாகிருஷ்ணமாயியின் குருபக்தி இன்று உலகம் முழுவதும் பரவி நிற்கிறது.

தொடரும்.

“தகுதியை பெறு”

கடைக்காரரிடமிருந்து இனிப்புப் பொட்டலத்தைப் பெறுவதுபோல பாபாவிடம்இருந்து பிரம்மஞானம் பெற்றுவிடலாம் என்ற நோக்கத்துடன் பாபாவிடம் அவ்வப்போது சிலர் வருவார்கள்.

ஏற்கனவே நாம் சாயி சத்சரித் திரம் 16–17 ம் அத்தியாயத்தில் ஒரு பணக்கார மனிதர் பிரம்மஞானம் பெற பாபாவிடம் வந்த கதையை நாம் படித்து தெரிந்து கொண் டுள்ளோம். இப்போது அதைப் போன்று மற்றொரு நிகழ்வைக் காண்போம்.

ஒரு முறை ஒரு செல்வந்தர், பாபாவைத் தேடி சீரடிக்கு வந்தார். வந்தவர் மசூதிக்குச் சென்று பாபாவிடம் நேரடியாக “கடவுள் எப்படி இருப்பார்” எனக் கேட்டுவிட்டு பாபாவின் பதிலை எதிர்பார்த்து அவரின் முன்பு உட்கார்ந்துகொண்டார். அவரை மேலும் கீழும் பார்த்த பாபா பதில் எதுவும் கூறவில்லை.

சிறிது நேரம் சென்றபின் அருகில் இருந்த பக்தர் ஒருவரை அழைத்த பாபா அவரிடம், பாக்சந்த் மார்வாடியிடம் சென்று பாபாவிற்கு நூறு ரூபாய் வேண்டு மாம் என்று கேட்டு வாங்கி வா என்றார்.

உடனே அந்த பக்தர் பாக்சந்த் மார்வாடியின் வீட்டிற்குச் சென்றார். சிறிது நேரம் கழித்து திரும்பி வந்த அவர், மார்வாடி தம் கையில் தற்போதைக்கு பணமில்லை என்று கூறி, தங்களுக்கு வணக்கத்தை தெரிவிக்கச் சொன்னார் என்று கூறினார்.

உடனே பாபா நூறுரூபாய் கடனுக்காக அவரை வேறு ஒரு மார்வாடியிடம் அனுப்பினார். இந்த முறையும் பக்தர் அதே பதிலுடன் திரும்பி வந்தார்.

அடுத்து பாபா, நானா சந்தோர்க்கரை அழைத்து வா எனப் பணித்தார். நானா வந்தார். தமக்கு 100 ரூபாய் வேண்டும் என பாபா நானாவிடம் கேட்டார். உடனே நானா பாக்சந்த் மார்வாடிக்கு ரூ.100 உடனடியாக அனுப்பி வைக்கும்படி ஒரு சீட்டு எழுதி ஒரு நபரிடம் அனுப்பினார்.

மார்வாடியிடமிருந்து ஒரே நிமிடத்தில் பணம் வந்துவிட்டது! நானா அதை பாபாவிடம் அளித்தார்.பணத்தைப் பெற்றுக் கொண்ட பாபா, செல்வந்தரைப் பார்த்து “இவ்வுலகில் எல்லாமே இதைப்போலத்தான்” என்றார்.

பொறுமையிழந்த செல்வந்த ருக்கு ஒன்றும் புரியவில்லை. கடவுளைப் பற்றி கேட்டபோது பாபா தனக்கு பதில் எதுவும் கூறாமல் கடன் பெறுவதற்காக ஒருவரை எங்கெங்கோ அனுப்பிக் கொண்டிருக்கிறார்! பாபா ஏன் அப்படி செய்தார் என தாஸ்கணு



மகராஜ் அவர்களிடம் சென்று விளக்கம் கேட்டார்.

பாபா உனக்கு மிகத் தெளிவாக பதிலளித்திருக்கின்றாரே என்று கூறினார் தாஸ்கணு. செல்வந்தரோ, எனக்கு சுத்தமாகப் புரியவில்லை. நீங்கள்தான் எனக்கு விளக்கிக்கூற வேண்டும் என்றவருக்கு தாஸ்கவே விளக்கிக்கூறினார்.

பாபா உட்பட மற்றவர்கள் பணம் கேட்டபோது, பணம் உடனே கிடைக்கவில்லை அல்லவா? ஆனால் நானா சாகேப் கேட்டவுடன் பணம் உடனே வந்துவிட்டது பார்த்தீர்களா! இதில் இருந்து என்ன தெரிகின்றது. கடவுள் எத்தகையவர் என்று கேட்பதால் மட்டும் ஒருவர் அதை அறிந்து கொண்டுவிட முடியாது.

அதைத் தெரிந்துகொள்ள யார் தகுதி பெற்றிருக்கிறாரோ, யாருக்கு அதை தெரிந்துகொள்ளும் யோக்கியதை இருக்கிறதோ,அவரே அந்த ஞானத்தைப் பெறுகிறார். ஆகவே பாபாவின் பதில், பிரம்மனை அறிய விரும்புவதற்கு முன்பு "தகுதியைப் பெறு" என்பதே யாகும். என்று கூறினார். ●

பகவான் ஸ்ரீ ரமண மகரிஷி

ஒரு துறவி இருந்தார். அவர் உடலில் புற்று மண் மூடும் அளவு 12 ஆண்டுகள் தவம் செய்தார். இறையை நேரில் உணர்ந்தார். அவர் முன் மயில், பாம்பு, பூனை, எலி முதலான பல விலங்குகள் தனது பகை மறந்து ஒற்றுமையாக இருந்தன.

தன்னை வந்து தாக்கிய தீயவர் களை கூட இவர் சபிக்கவில்லை. போலீசில் புகாரும் கொடுக் கவில்லை. அத்தகை யோரிடமும் அன்பைக் காட்டி திருத்தினார். பலரின் நோய்களை இவர் குணப் படுத்தினார் அதே சமயம் இவர் தனக்கு வந்த புற்று நோயைக் குணப் படுத்த இவர் தனது தபோ வலிமை யைப் பயன்படுத்த வில்லை.

மருத்துவர்கள் சந்தித்தது இல்லை. இனி சந்திக்கப் போவதும் இல்லை.

அறுவை சிகிச்சை செய்த மருத்துவர்களுக்கு இருந்த பதட்டத்தில் ஒரு சதவீதம் கூட அந்த துறவிக்கு இல்லை. மலர்ந்த தாமரை போன்ற சிரித்த முகத்தோடு அந்தத் துறவி இருந்தார்.

நான் யார் என்ற கேள்வியை தனக்குத் தானே கேட்டுக் கொண்டு. அதற்கு விடையையும் கண்டு, முற்றும் உணர்ந்த ரமண மஹரிஷிக்கு இந்த கேன்சர் கட்டி எம்மாத்திரம். இவர் ஒரு உண்மை யான ஞானி என்றால். இவருக்கு எவ்வாறு? புற்று நோய் வரும். தனது நோயை குணப் படுத்தும் சக்தியே இந்த ஞானிக்கு இல்லையா? பல

எனது கர்ம வினையை நான் அனுபவித்தே தீர வேண்டும் என்று அவர் உறுதியாக இருந்தார். இந்த துறவியின் உத்தரவைத் தட்ட முடியாமல். மயக்க மருந்து கொடுக் காமல்தான் கேன்சர் கட்டியை நீக்கும் அறுவை சிகிச்சையை இவருக்கு டாக்டர்கள் செய்தார்கள்.

அந்த துறவி துளி கூட கத்த வில்லை. அவ்வளவு ஏன். ஒரு சொட்டு ரத்தம் கூட அந்த துறவிக்கு அறுவை சிகிச்சை செய்யும் பொழுது வரவில்லை. இத்தகைய ஒரு அதிசய நபரை அதுவரை அந்த

நாத்திக கேள்விகள்.

நியூட்டனின் மூன்றாம் விதி சொல்வது என்ன? ஒவ்வொரு வினைக்கும் எதிர்வினை உண்டு. ரமண மஹரிஷி போன்றவர்கள் இது போல் தன்னைப் பழிப்பவர்களை சபிக்க மாட்டார்கள். அதே சமயம் நமது பாவ, புண்ணிய பலன்களை நாம் அனுபவித்தே தீர வேண்டும். அதில் இருந்து தப்பவே முடியாது என்று தான் சித்தர், புத்தர் என அனைவரும் சொல்லும் விஷயம்.

பூகோளம், வரலாறு, அறிவியல் என அனைத்தைப் பற்றியும்



ரமணருக்குத் தெரியும். இவரிடம் யார் எந்த மொழியில் பேசினாலும் அந்த மொழியில் இவர் அவர்களிடம் பேசுவார். இவை எல்லாம் ரமணர் எப்பொழுது கற்றுக் கொண்டார் என்பது இவருக்கு நெருங்கியவர்களுக்கே தெரியாத ஒன்று.

ஒருமுறை அமெரிக்காவில் இருந்து ஒரு தம்பதியர் ரமணரை தரிசிக்க வந்து இருந்தனர். திருவண்ணாமலைக்கு நிகராக ஏதேனும் எங்கள் அமெரிக்காவில் ஒரு புனித ஸ்தலம் இருக்கின்றதா என்று அந்த தம்பதியர் ஆவலோடு கேட்டனர்.

ரமணர் சிலநொடிகள் கண்மூடிப் பின்னர் புன்னகை தவழும் முகத்துடன் இருக்கின்றது. அது கலிபோர்னியாவில் உள்ள Mount Shasta என்றார். திருவண்ணாமலை, அமெரிக்காவில் உள்ள கலிபோர்னியா மாகாணத்தில் உள்ள Mount Shasta இரண்டுமே ஒரு காலத்தில் எரிமலையாக இருந்தது.

தொடர்ந்து பத்தாயிரம் ஆண்டுகளாக ஒரு எரிமலையில் இருந்து எரிமலைக் குழம்பு வரவில்லை என்றால் அந்த எரிமலை Extinct Volcano. திருவண்ணாமலை, Mount Shasta இரண்டுமே Extinct Volcano என்பதை அந்த அமெரிக்கத் தம்பதியினருக்கு ரமண மகரிஷி சொன்னது தான் அவர்களுக்கு ஆச்சர்யத்திலும் ஆச்சர்யம்.

தமிழ்நாட்டைத் தாண்டாத இவருக்கு, கலிபோர்னியாவில் அப்படி ஒரு மலை இருப்பது எவ்வாறு தெரிந்தது. இன்று அமெரிக்காவில் உள்ள புனித ஸ்தலங்களில் Mount Shastaவும் ஒன்று. திருவண்ணாமலை போல் அந்த மலையையும் பல பக்தர்கள் கிரிவலம் செய்வதாக சொல்கிறார்கள்.

தன்னை உணர்ந்த மகான்களுக்கு எதுவுமே துன்பமில்லை. ●

குருவைத்தேடி ஆங்கில மொழிபெயர்ப்பு முன்னுரை



29.10.2024 குரு துவாதசி. இந்த நாளில் ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் என்னும் யோகி தன் உடலைத் துறந்து ஒளியாகி பிரபஞ்சத்துடன் கலந்த நாள். "குருவைத் தேடி" என்னும் ஞான பெட்டகத்தின் ஆங்கில மொழிபெயர்ப்பை நிறைவு செய்வதற்கு இயற்கை என்ன மாதிரியான நாளை தேர்ந்தெடுத் திருக்கிறது!

'யோகி ஸ்ரீராம் பாபா' அவர்கள் எனக்கு கடந்த 2022 ஆம் ஆண்டு சம்பூர்ண ஸ்ரீ பாத ஸ்ரீவல்லப சரிதாம்ருதம் புத்தக வெளியீட்டு விழாவில் 'குண்டலினி யோகி ஸ்ரீராம்' என்று அறிமுகப்படுத்தப்பட்டார். அப்போது எனக்கு குண்டலினி யோக முறை, பயிற்சிகளைப் பற்றி எள்ளளவு கூட தெரியாது. இருப்பினும், அந்த வார்த்தையில் ஓர் பரிச்சயம் இருந்தது.




பின்னர் 'அக்கல் கோட் மஹராஜ் ஸ்ரீ ஸ்வாமி சமர்த்த லீலாம் ருதம்' என்னும் நூலுக்கு அவரை அருளுரை வழங்கு வதற்கு நான் பணிந்தபோது அவருடன் சில உரை யாடல்கள் நிகழ்ந்தன. அதன் பிறகு என்னை இயற்கை உட்படுத்திய சில பணிகளின் காரணமாக, என் உடலிலும், மனதிலும் தானாகவே சில மாற்றங்கள் வெளிப்பட்டது. அப்போது நான் 'குண்டலினி யோகி ஸ்ரீராம்' அவர்களை தனிப்பட்ட முறையில் சந்தித்து தியான பயிற்சிகள் எடுத்துக்கொள்ளத் தொடங்கினேன்.

அந்த தனிப்பட்ட உரையாடல்கள், அவர் போதிக்கும் ஞான மார்க்கம் பற்றியும், அவருடைய வாழ்க்கை அனுபவங்களைப் பற்றியும், குண்டலினி யோகத்தைப் பற்றியும், ராஜ யோகப் பாதை பற்றியும், தியானத்தை பற்றியும், பல ஆன்மீக விஷயங்களை பற்றிய எங்களது சத்சங்கம் மணிக் கணக்காக நீளும். அந்நாட்களில் நான் அவரை "குரு" ஸ்ரீராம் என்று உணர்ந்து கொண்டேன்.

ஜூலை மாதம் 2024 ஆம் ஆண்டு, 'சாய் மஹராஜ் குருவை தேடி' ஆன்மீக மாத இதழின் ஆண்டு விழாவில் "குரு ஸ்ரீராம்" அவர்களின் 'குருவைத் தேடி' அடைந்த அனுபவங்கள் நிறைந்த ஒரு

திருமதி. மாதங்கி பாலாஜி



தமிழ் புத்தகம் வெளியானது. அவருடைய வாழ்க்கை அனுபவங்களை சிறிது ஏற்கனவே ரசித்து உணர்ந்து கொண்டிருந்ததால், அதன் பலனை உலகத்தில் வாழும் அனைத்து மக்களும் உணர்ந்து பயன் அடைய வேண்டும் என்ற எண்ணம் என் மனதில் தோன்றியது.

ஆகவே அப்புத்தகத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்க்க வேண்டும் என்று அவரிடம் விண்ணப்பித்தேன். எனக்கு ஆங்கில மொழிபெயர்ப்பில் எந்தவித அனுபவமும் இல்லாமல் இருந்தாலும், அதை இயற்கையின் திட்டம் என்ற அடிப்படையில், அவர் எந்தவித கட்டுப்பாடுகளும் விதிக்காமல் எனக்கு சம்மதம் தெரிவித்தார்.

மொழி பெயர்ப்பு தொடங்குவதற்கு முன்னர் புத்தகத்தை முழுவதுமாக படித்தேன். ஏற்கனவே சில விஷயங்களை குரு அவர்கள் நேரடியாகக் கூறி கேட்டிருந்தாலும், அதை முழு அனுபவமாக படிக்கும் போது ஆச்சர்யத்தின் உச்சிக்கே சென்றேன் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை. ஆங்கில மொழி பெயர்ப்பு பணி தமிழ் புத்தகம் வெளியாவதற்கு சில நாட்களுக்கு முன்பே ஆரம்பமானது.

சாதாரணமாக, கதை வடிவம் போல் தொடங்கிய புத்தகம் போகப் போக நான் படித்து உணர்ந்ததைக் காட்டிலும் மொழி பெயர்க்கும் போது வித்தியாசமான அனுபவத்தை கொடுத்தது.

13 வயது முதல் அவருக்கு 'குருவை தேடி' அடைய வேண்டும் என்கிற வேட்கை உருவாகியிருக்கிறது. அது அவருடைய 40 வது வயதில் நிறைவேறியிருக்கிறது. முதல் சில அத்தியாயங்களில் அவர் பல குருமார்களை சந்தித்த அனுபவங்களையும், அடுத்து வரும் அத்தியாயங்களில் தான் வந்த வேலை என்ன என்பதை நினைவூட்டும் வகையில் நடைபெற்ற தன் பூர்வ ஜன்ம நினைவுகளை நினைவூட்டிய தருணங்களைப் பற்றி விவரித்துள்ளார்.

அடுத்து திருமணம் நடைபெற்று லௌகீக வாழ்க்கையில் ஈடுபட்டு, தான் கற்றுக் கொண்ட பாடங்கள் அனைத்தையும் மறந்து வாழும் நிகழ்ச்சிகளை விவரித்துள்ளார். இறுதியாக, தான் வந்த வேலையை மறந்து சொந்த வேலையில் ஈடுபட்டதை உணர்ந்து

கொண்டு குருவைத் தேடி அடைந்த வியப்பூட்டும் அனுபவங்களை விவரித்திருக்கிறார்.

சீரடிக்கு நடந்தே சென்ற அனுபவத்தை அவர் விவரிக்கும் தருணங்களில் நாமும் அவருடன் சேர்ந்தே நடந்து சென்றது போன்ற உணர்வு ஏற்படுகிறது. குறிப்பாக, அவர் டாக்டர் சாயிராம் அவர்களை சந்திக்கும் தருணம் கல் நெஞ்சம் கொண்டவரையும் கலங்கச் செய்யும்.

சீரடியை அடைந்து 'ஞானம்' பெற்ற தருணத்தை விவரிக்கும் இடங்களிலும், தான் பல குருமார்களினால் பண்படுத்தப் பட்டதை மறந்துவிட்டதை உணர்ந்து கொள்ளும் இடங்களிலும் நாம் நம்மையே மறந்து, வியந்து அக்கதைக்குள் சென்று விடுகிறோம்.



'என் வேலையைப் பார்' என்று சாயிநாதர் அவர் காதில் கிசுகிசுத்திருக்கிறார். முதலில் அதன் அர்த்தம் புரியாமல் இருந்திருக்கிறார். பின்னர் அதை புரிந்து கொண்டு அதற்கான பயிற்சிகளில் ஈடுபட்டிருப்பதை நமக்கு இலை மறை காயைப்போல விளக்கியிருக்கிறார்.

அதாவது, 'நான் என்ன செய்தேனோ அவ்வேலையை நீ தொடர்ந்து செய். நீயே பாபாவாக மாறிக் கொள்' என்று சாயிநாதர் கூறியிருக்கிறார். 'நீ எதை நினைத்துக் கொண்டே இருக்கிறாயோ அதுவாகவே ஆகிறாய்' என்கிற புத்த பெருமானின் வாக்கிற்கினங்க அவர் சதா சாய்நாதரை நினைத்துக் கொண்டு நான்கு வருடங்கள் கடுமையான மௌனத்தவத்தை மேற் கொண்டு பாபாவாகவே மாறியிருக்கிறார் என்பதை உணர்ந்த போது, நான் அவரை, 'யோகி ஸ்ரீராம் பாபா' என்று அறிந்து கொண்டேன்.

சாய்நாதர் ஒருவரை தேர்ந்தெடுத்து, அவரை தன்னைப் போலவே உருவாக்க, அவருக்கு பலவிதமான கடுமையான பயிற்சிகள் அளித்து, நமக்காகவே அளித் திருக்கிறார். என்னே சாயிநாதரின் கருணை! நாம் அனைவரும் மிகவும் புண்ணியம் செய்தவர்கள்! சாயிநாதரின் மறுவடிவமான "யோகி ஸ்ரீராம் பாபா" வை நாம் இறுகப் பற்றிக்கொண்டு நாம் நம் பிறவியை கடைந்தேற்றிக் கொள்ள வேண்டும். இவ்வாய்ப்பை தவற விட்டால் மீண்டும் எப்போது கிடைக்குமோ தெரியாது.

குரு வாழ்க! குருவே துணை! ●

SoundzGood
Music at its best...



TRUE TO OUR NAME EVERYTIME SOUNDS GOOD!!!

SPREADING HAPPINESS

- Live Instrumental
- Vocal and Instrumental
- Carnatic and all genres





BOOK NOW

9566167680 / 9003120624
WWW.SOUNDZGOOD.IN
46, Rajiv Gandhi salai OMR

கோவை உத்சவ் பிரசாந்தியில் சத்சங்கம்

- யோகி ஸ்ரீராம் பாபா

கடந்த 19, 20, தேதிகளில் கோவை உத்சவ் பிரசாந்தியில், ஸ்ரீ சத்ய சாய் அவர்களின் 99 வது பிறந்தநாளை முன்னிட்டு, திரு. பாலாஜி அவர்களின் ஏற்பாட்டின் பேரில், யோகி ஸ்ரீராம் பாபா அவர்கள், மற்றும் "பாராயணப்பகலவன்" திரு.சுந்தர் சாய் ஆகியோர் கலந்துகொண்ட சத்சங்கம் நடைபெற்றது.

எங்களுடைய 15 வருட சத்சங்க அனுபவத்தின் மூலமாக ஒன்றை இங்கு நாங்கள் உணர்ந்து கொள்ள முடிந்தது. ஆம், பிரட்சனை என்பது அடித்தட்டு மக்களுக்கு மட்டும் அல்ல. சமூகத்தில் எல்லா நிலை மனிதர்களுக்கும் இருக்கின்றது என்பதை எங்களால் புரிந்து கொள்ள முடிந்தது.





உத்சவ் பிரசாந்தியில் வசிக்கும் மக்கள் எங்களை அன்புடன் வரவேற்று உபசரித்தார்கள். முதல்நாள் திரு. பாலாஜி அவர்கள் M.D திரு. சதீஷ் அவர்களை சந்திக்க வைத்தார். அன்புடன் வரவேற்று உபசரித்த M.D அவர்கள் எங்களது சத்சங்கத்திற்கு அனுமதி அளித்து ஊக்கம் அளித்தார்.

முதல்நாள் திரு. சுந்தர்சாய்ராம் அவர்கள் தத்த பரம்பரையைப் பற்றி விளக்கமாக சத்சங்கம் நிகழ்த்தினார்கள். அடுத்ததாக, யோகி ஸ்ரீராம் பாபா அவர்கள் "ஆத்மஞானம்" என்ற தலைப்பில் சத்சங்கம் நிகழ்த்தினார்கள். தொடர்ந்து தியானம் நிகழ்ந்தது. யோகி அவர்கள் அனைவருக்கு



மான "பிரபஞ்ச தியானத்தை" வழங்கினார்கள்.

மறுநாள் யோகி அவர்களின் சத்சங்கமும், பக்தர்களின் கேள்விகளுக்கு பதில் அளிக்கும் நிகழ்ச்சியும் நடந்தது. தொடர்ந்து "பிரபஞ்ச தியானமும்" நிகழ்த்தப்பட்டது. உத்சவ் பிரசாந்தி மக்கள் அனைவரும் பொருமையுடன் அனைத்து நிகழ்ச்சிகளிலும் ஆர்வமுடன் கலந்து கொண்டார்கள். தியானத்தில் கலந்து கொண்டு உணர்ந்தவர்கள் அனைவரும் யோகியுடன் தங்களது அனுபவத்தை பகிர்ந்து கொண்டனர்.

அதைத் தொடர்ந்து சத்யசாயிபாபாவின் பிறந்தநாள் நிகழ்ச்சி கொண்டாடப்பட்டது. "பாராயணப் பகலவன்" திரு. சுந்தர் சாய் அவர்கள் பாபா விற்கு ஆரத்தி எடுத்து பக்தர்களுக்கு பிரசாதம் அளித்து ஆசி வழங்கினார்கள்.

மிகவும் சிறப்பாக நடைபெற்ற இந்நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்த திரு. பாலாஜி அவர்களுக்கும், இந்நிகழ்ச்சிக்கு அனுமதி அளித்த M.D திரு. சதீஷ், அவர்களுக்கும், திருமதி. பிரியா சதீஷ் அவர்களுக்கும், அசோசியேஷன் தலைவர் திரு. கண்ணன் அவர்களுக்கும், அனைவருக்கும் சிறப்பான அன்ன பிரசாதம் வழங்கிய திரு. இராமச்சந்திரன் திருமதி. சந்திரகலா இராமச்சந்திரன் ஆகியோருக்கும், எங்களது மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றோம்.



வாழ்க வளமுடன்!
வாழ்க வையகம்!

சாய் தியானாலயா ஆத்ம ஞான பீடத்தின்
அற்புத ஆன்மீகப் பயிற்சி

ஆத்ம ஞானம்

(உன்னையே நீ அறிவாய்)

மானுட வாழ்வின் ஒட்டுமொத்த பிரச்சனைக்கும் ஒரே தீர்வு தன்னையறிதல்
வாய்ப்பேச்சில் ஒன்றுமில்லை, இணைந்திடுவீர் இக்கணமே!




- தீராத உடல் நோய், மன நோயில் இருந்து விடுதலை.
- ஆரோக்கியம், ஆனந்தம்,
- தொழில் வெற்றி,
- குடும்ப நிம்மதி,
- தெய்வீக அதிர்வுகள்.

விபரங்களுக்கு,

சாய் தியானாலயா ஆத்ம ஞான பீடம்,

9/1A, பழனியப்பா 2 வது தெரு, அயனாவரம், சென்னை–23.

9941816692 , 8825831068



யோகி ஸ்ரீராம் பாபா
அவர்கள் எழுதிய
அற்புதமான
ஆன்மீகத் அனுபவத்
தேடல்கள் நிறைந்த
"குருவைத்தேடி"
நூல் விற்பனையில்
உள்ளது. தேவைப்படுவோர்
தொடர்பு கொள்ளவும்.

விலை 400/-
(தபால் செலவு உட்பட)

G- PAY NO: 9941816692

SAI DHYANALAYA

சித்தர்களின் சீவ சமாதி தரிசனம்

சித்தர்களின் சீவ சமாதி தரிசனத்தில் இம்மாதம், திருவாரூர் மடப்புரம் அருள்மிகு ஸ்ரீ குரு தட்சிணாமூர்த்தி சுவாமிகளின் சீவ சமாதியை தரிசனம் செய்து அவரின் வரலாற்று குறிப்புகளை அறிந்து கொள்வோம் வாருங்கள்!



– அயனாவரம்
வெங்கடேசன்
9941782523

ஸ்ரீ தட்சிணாமூர்த்தி சுவாமிகள்



சித்தர்களின் சீவனாக, சமாதியாக உள்ள திருக்கோயில்களில் இயற்கையிலேயே ஒரு ஈர்ப்பும் தெய்வீகமும் இருக்கிறது.

திருவாரூரில் தியாகராசர் சுவாமி கோயில், பிரம்மாண்டமான தேர், கமலாலய திருக்குளம் பிரசித்தி பெற்றது போல் இன்னுமொரு அடையாளம் திருவாரூர் மடப்புரம் அருள்மிகு ஸ்ரீ தட்சிணாமூர்த்தி சுவாமிகளின் சீவ சமாதி மடம்.



ஆம், பேசாமல் பேசிய மகான். நீயே நான்! நானே நீ! என்று கூறிய சித்தர். அவதூத சுவாமிகளாக வாழ்ந்த மடப்புரத்து நாயகன் நமது குரு ஓம் ஸ்ரீ தட்சிணாமூர்த்தி சுவாமிகள். திருச்சி அருகே உள்ள கீழாத்தூர் கிராமத்தில் ஸ்ரீ சிவசிதம்பரம் பிள்ளை ஸ்ரீ மீனாம்பிகை தம்பதியருக்கு நெடுங் காலமாக குழந்தை பாக்கியம் இல்லை. அதனால் அண்ணா மலையாரை வேண்டி வழிபட்டதன் பலனாக பிறந்தவர் தான் நமது ஸ்ரீ குரு தட்சிணாமூர்த்தி சுவாமிகள். இவருக்கு பெற்றோர் "அருணாச்சலம்" என்று பெயரிட்டு அழைத்தனர்.

ஐந்து வயது வரை ஊமையாக இருந்த அருணாச்சலம் சிவபெரு மான் அருளால் பேசினார்.



சிவபெருமான் சிவனடியார் வேடத் தில் வந்து நமது சுவாமிகளுடன் பேசினார். குழந்தை பிறந்து வளர்ந்தது திருவாரூரில். சுவாமி களின் கடைசி காலத்தில் ஜீவ சமாதி அடைந்தது திருவாரூர் மடப்புரத்தில்.

பள்ளி படிப்பை கற்க பள்ளி கூடத்தில் சேர்த்து விட, எப்போதும் ஊமையாக இருப்பார். கண்ணை மூடிக் கொண்டு தியானத்தின் இருப்பார். திடீரென்று நடத்தும் பாடத்தில் கேள்வி கேட்டால் துல்லியமாக பதில் கூறுவார். இதனால் ஆசிரியர்கள், சுவாமிகள் சாதாரண பிள்ளை கிடையாது இறையருள் பெற்ற குழந்தை என எண்ணி தரையில் அமர்ந்து அருணாசலத்துக்கு பாடம் சொல்லித் தருவார்கள்.

ஒரு முறை இவரை சோதிக்க சிவனடியார் ரூபத்தில் சிவ பெருமானே நேரில் வந்து கண்ணை மூடிக் கிடந்த தட்சிணாமூர்த்தி சுவாமிகளிடம் ஏன் கண்ணை மூடிக் கொண்டிருக்கிறாய்? எனக் கேட்க நமது சுவாமிகள் பெருமானை பார்த்து "நீயே நான்! நானே நீ" என்று பேசினார். இதிலிருந்து சிவபெருமானே பேசும் சக்தியை அருளியதாக சொல்கின்றார்கள். தன் தந்தை வழி பாட்டி காலமாகும் நேரத்தை, நாளையும் மிகச்சரியாக தன் தந்தையிடம் கூறினார். அது போலவே நடந்தது. தந்தையார் அருணாசலத்தைப் பார்த்து வியந்து வணங்கி நின்றார்.

பூட்டி கிடந்த வீட்டில் தீப்பற்றி



எரியும் சமயத்தில் குழந்தை ஒன்று அழுது கொண்டே இருந்தது. துறவி ரூபத்தில் சென்று குழந்தையை காப்பாற்றினார். குழந்தையின் தாய், நமது மகானுக்கு கண்ணீர் மல்க நன்றி கூறினார்.

சித்தூர் சோமநாத முதலியார் அவர்கள் குஷ்டநோயால் அவதிப்பட்டு நம்முடைய மகான் தட்சிணாமூர்த்தி சுவாமிகள் அருளால் குணமாகிய அற்புதமும் நடந்து உள்ளது. இந்நிகழ்ச்சிக்கு பின்னர்தான் அருணாச்சலம் என்ற மனிதர் அருள்மிகு ஸ்ரீ தட்சிணாமூர்த்தி சுவாமிகளாக மாறினார் என்பது குறிப்பிடத்தக்கது.

தான் சீவ சமாதி அடையும் காலத்தை பெற்றோர்களிடம் தெரிவித்தார். அதை கேள்விப்பட்ட அவர்கள் தன் மகனுக்கு முன்னால் இறைபதம் அடைய தட்சிணாமூர்த்தி சுவாமிகளிடம் கூறினார்கள். சுவாமிகளும் பெற்றோர்களின் விருப்பப்படி அவர்கள் நெற்றியில் திருநீறு பூசியபோது இருவரும் இறைவனடி சேர்ந்தார்கள்.

அதன் பின்னர், மடப்புரம் ஓடம் போக்கி ஆற்றின் கரையில் அமர்ந்து 1836 ஆவணி மாதம் பன்னிரெண்டாம் தேதி புதன்கிழமை பூர்வ பட்சம் திருதியை திதி உத்திர நட்சத்திரத்தில் பகல் 12 மணியளவில் விருச்சிக ராசியில் நமது குருநாதர் அருள்மிகு ஸ்ரீ தட்சிணாமூர்த்தி சுவாமிகள் சீவ சமாதி அடைந்தார்.

சித்தர்களின் சீவ சமாதி தரிசனம் நமது வாழ்வின் கர்ம வினையின் வீரியத்தை குறைக்கும் என்பதில் சந்தேகமில்லை.

ஜீவ பீட ஆலய முகவரி, அருள்மிகு ஸ்ரீ குரு தட்சிணாமூர்த்தி சுவாமிகள் சீவ சமாதி மடம், மடப்புரம், திருவாரூர் – 610001.

பேருந்து மார்க்கம்: திருவாரூர் பேருந்து நிலையத்திலிருந்து அரை கி.மீ. தூரத்தில் உள்ள மடப்புரம் ஊரில் நமது அருள்மிகு ஸ்ரீ தட்சிணாமூர்த்தி சுவாமிகள் சீவ சமாதி ஆலயம் உள்ளது.

இரயில் மார்க்கம்: சென்னை எழும்பூரில் இருந்து திருவாரூர் இரயில் நிலையம் வந்தடைந்து அங்கிருந்து ஷேர் ஆட்டோ, பேருந்து மூலம் மடப்புரம் கோயிலை அடையலாம்.

(தரிசனம் தொடரும்)

– வே.ஸ்ரீராம்


சாய் சரிதம் - 9

கதை வழியில்

எனது கதைகளை உங்களது உள்ளத்தில் பதிவேற்றுங்கள். ஒவ்வொரு கதையும் தரும் குறிப்பு நுட்பத்தை நன்றாகப் பிடித்துக் கொள்ளுங்கள். அதனால் உங்களது மனத்தின் பதைபதைப்பு மறைந் தொழியும். உங்களுக்கு உண்மையான சாந்தியும் அமைதியும் கிடைக்கும். எனது கதைகள் உங்களுக்கு உண்மையான வழியைக் காட்டி ஆசீர்வதிக்கும்.

– ஸ்ரீ சீரடி சாய்பாபா

1910 *ஆம் வருடம் தீபாவளிக்கு மறுநாள் பாபா துனிக்கருகில் அமர்ந்து குளிர் காய்ந்து கொண்டிருந்தார். பிரகாச மாக எரிந்து கொண்டிருந்த துனியில் அவரே விறகை எடுத்துப் போட்டு நெருப்பை எரிய வைத்துக்கொண்டிருந்தார்.*



நானும், மாதவராவ் தேஷ் பாண்டேயும், பாபாவின் வேலைக் காரனான மாதவ் என்பவரும் மற்றும் சிலரும் துவாரகாமாயியின் படிகளில் அமர்ந்து பாபாவைப் பார்த்துக் கொண்டு இருந்தோம். அன்று வழக்கத்திற்கு அதிகமாக குளிரின் தாக்கம் இருந்தது. ஆகையால் துனியில் எரிந்து கொண்டிருந்த நெருப்பின் வெப்பம் எங்களுக்கும் தேவையாக இருந்தது.

பாபா எரியும் நெருப்பையே வெறித்துப் பார்த்த வண்ணம் இருந்தார். நாங்கள் பாபாவைப் பார்த்துக் கொண்டிருந்தோம். பாபா என்ன நினைத்தாரோ தெரிய வில்லை. எரியும் நெருப்பில் விறகை எடுத்துப் போட்டுக் கொண்டிருந் தவர். திடீரென விறகிற்குப் பதில் தனது கைகளையே நெருப்பிற்குள்



நுழைத்து விட்டார்.

இதை முதலில் கவனித்த வேலையாள் மாதவ், பாபா! பாபா! என்று பாபாவை நோக்கி ஓட, அதைத் தொடர்ந்து பாபாவை கவனித்து விட்ட மாதவ்ராவ்வும், பாபாவை நோக்கி எழுந்து ஓடி பாபாவின் இடுப்பில் தனது கைகளைக் கோர்த்து அவரை அப்படியே பின்னால் இழுத்துச் சென்று நெருப்பில் இருந்து சற்று தூரத்தில் அமரச்செய்தார்.

பின்பு முன்னால் வந்து பாபாவின் கைகளைப் பிடித்துப் பார்த்தார். அவரது முழங்கை வரை தீக்காயம் பட்டு கைகள் கருகிப்போய் இருந்தது. மாதவ்ராவ் பாபாவைப்பார்த்து " ஏன் தேவா, ஏன் தேவா, எதற்காக இப்படி செய்தீர்கள்" என்று கேட்டார். பாபா அதற்கு பதில் கூறாமல் எங்கோ வெறித்தபடி இருந்தார்.

மாதவ்ராவ், பாபாவின் தோளை இறுகப்பற்றி உலுக்கி மீண்டும், தேவா, ஏன் இப்படி பைத்தியக் காரத்தனமாக செய்தீர்கள் என்றார். பாபா தம் உணர்வுக்கு வந்தவாறு மாதவ்ராவ்வைப் பார்த்து பதில் கூறினார்.

"எங்கோ தொலைதூரத்தில் ஒரு கொல்லனின் மனைவி உலைக்களத்தில் இருந்த துருத்தியில் வேலை செய்து கொண்டிருந்தாள். அப்போது அவளது கணவன் அவசரமாக அவளைக் கூப்பிட்டான். அவள் தனது இடுப்பில் குழந்தை இருப்பதை மறந்து அவசரமாக எழுந்து ஓட முயற்சித்தாள்.

அப்போது இடுப்பில் இருந்த அவளது குழந்தை நழுவி உலைக் களத்தில் விழுந்துவிட்டது. நான் உடனே எரியும் உலைக்களத்தில் கையை விட்டு குழந்தையை காப்பாற்றினேன் என்றார்.

அது சரி, ஆனால் எங்களின் தேவனின் கரங்கள் கருகிவிட்டனவே? நாங்கள் இப்போது என்ன செய்வது, என படபடத்தார் மாதவ்ராவ்.

என் கரங்கள் வெந்து போனால் என்ன? குழந்தை காப்பாற்றப்பட்டதை எண்ணி நான் மகிழ் வடைகின்றேன். எல்லா உயிர்களையும் காக்கவேண்டியது என் கடமை இல்லையா? சீரடி

மக்களை மட்டும் காப்பதுதான் என் வேலையா என்றார் பாபா.

உங்களிடம் பேசிக்கொண்டிருந்தால் உங்கள் காயத்திற்கு மருந்திடுவதை மறந்து விடுவேன் என்றவாறே, வேலையாளிடம் நெய் எடுத்துவரச் செய்து பாபாவின் காயங்களின் மீது நெய்யை தடவி முதலுதவி செய்துவிட்டு பாபாவிடம் விடைபெற்றுக்கொண்டு தீட்சித் வாடாவில் தங்கியிருந்த நானா சகேப் சாந்தோர்கரிடம் சென்று செய்தியைக்கூறினார்.

நானாவும் உடனே துவாரகாமாயிக்கு ஓடிச் சென்று பாபா தீக்காயங்களை கண்டு, காயங்கள் அதிகமாக இருப்பதால், பம்பாயில் இருந்து அந்நாளில் புகழ் பெற்ற மருத்துவரான திரு. பரமானந்த் என்பவரை உடனடியாக சீரடிக்குப் பறப்பட்டு வருமாறு தந்தி அனுப்பினார். மருத்துவரும் உடனடியாக மருத்துவச்சாமான்களுடன் புறப்பட்டு மறுநாள் காலையிலேயே சீரடி வந்து சேர்ந்தார்.

மறுநாள் மசூதியில் அமர்ந்திருந்த பாபாவிடம் மருத்துவரை அழைத்துவந்து அறிமுகப்படுத்தி, தீப்புண்ணுக்கு சிகிச்சை எடுத்துக் கொள்ளும்படி நானா பாபாவிடம் வேண்டினார். ஆனால் பாபா மருத்துவரிடம் சிகிச்சை எடுத்துக் கொள்ள முடியாது என்று மறுத்து விட்டார்.

ஆனால் பாபாவால் குணப்படுத்தப்பட்ட தொழுநோயாளி பாகோஜி சிந்தே என்பவரை அழைத்து தனது கைகளில் உள்ள தீப்புண்ணுக்கு நெய்யை தேய்த்து ஒரு வகையான இலையை பிடுங்கி வந்து அதன்மீது வைத்து கட்டுப் போட்டுவிடும் படி பணித்தார். பாகோஜியும் சிந்தேவும் அதன் படியே தொடர்ந்து செய்து வந்தார்.

நானா சாகேப் பலமுறை பாபாவிடம் பம்பாயில் இருந்துவந்த மருத்துவரைக் கூட்டிவந்து பாபாவின் கையில் உள்ள காயத்தை சோதிக்கவும், சிகிச்சை செய்யவும் அனுமதிக்க வேண்டி மன்றாடிக் கேட்டுக்கொண்டார்.

மருத்துவர் பரமானந்தும் தன்னை சிகிச்சை செய்ய அனுமதிக்க வேண்டி பாபாவிடம் வேண்டிக் கொண்டார். பாபா மருத்துவரிடம், "அல்லாவே என்னுடைய மருத்துவர். உங்களுடைய சிகிச்சையும், மருந்துகளும் எமக்கு பயன்படாது" என்று கூறிவிட்டார்.

இதனால், மருத்துவர் மனம் வேதனைப்படுமே என்று எண்ணிய நானா, மருத்துவரிடம் தன்னை மன்னிக்கும்படி வேண்டினார். ஆனாலும் மருத்துவர் பரமானந்தம் நானாவிடம், பாபா என்னிடம் சிகிச்சை எடுத்துக் கொள்ளாவிட்டாலும் பரவாயில்லை. அவரை சிகிச்சை எடுத்துக் கொள்ளுங்கள் என்று கூறும் சாக்கில் தினம்தோறும் நான் அவரது தரிசனத்தை பெறுகின்றேனே. அதற்கு நான் தான் தங்களுக்கு நன்றி கூற வேண்டும் என்று கூறினார்.



பாபாவால் தனக்கு சிகிச்சை அளிக்க அனுமதிக்கப்பட்ட பாகோஜி சிந்தே தினந்தோறும் தவறாமல் பாபாவின் கரங்களில் உள்ள கட்டுக்களை அவிழ்த்து சுத்தம் செய்து, மீண்டும் நெய் பூசி அதன்மீது புதிய இலைகளை வைத்து துணியால் கட்டுப்போட்டு வதை தவறாமல் தினந்தோறும் செய்து வந்தார்.

பாகோஜியின் சிகிச்சையால் சில நாட்களிலேயே பாபாவின் கரங்களில் இருந்த தீக்காயங்கள் குணமடைந்தது. இருப்பினும் பாபாவின் மகாசமாதிவரை பாகோஜி தினந்தோறும் பாபாவின் கரங்களுக்கு நெய்பூசி நீவிவிடும் பழக்கம் தொடர்ந்தது.

சாயி மகா சித்தர் என்றதனால் அவருக்கு இந்த சிகிச்சை தேவை யிருக்கவில்லை. ஆனால் பாபா தனது அடியவரின் மீது உள்ள அன்பினால் அவரது சேவையை முழுமனதோடு தொடர்ந்து நடக்க அனுமதித்தார். பாகோஜி தொழுநோயால் பாதிக்கப் பட்டிருந்தார். பாபா அவர்மீது கருணை கொண்டு அவரே தனது கைகளால் அவரது புண்களை துடைத்து மருந்திட்டு குமுப்படுத் தினார்.

பாபாவால் குணப்படுத்தப்பட் டிருந்தாலும், பாகோஜி சிந்தேவின் கைகள் சுறுங்கியிருந்தன. அவரது உடல் நாற்றமடித்தது. ஆனாலும் அவர் உடலால் துரதிர்ஷ்டசாலியாக இருந்தாலும் மிகவும் அதிர்ஷ்டசாலியாகவும், மகிழ்சியானவராகவும் இருந்தார்.

ஏனெனில் அவரே பாபாவின் முதன்மையான சேவகர். பாபா வின் அருகாமையில் இருந்து அவரது பரிபூரணமான ஆசியால் உண்டாகும் நன்மையை முழுவது மாக அனுபவித்த மகாபாக்கியவான். பகவான் சாயி பகோஜியிடம் நடந்து கொண்ட விதம் நமக்கு மிகப்பெரிய பாடம். நாமும் நம்மை சுற்றியுள்ளவர்களிடம் எப்படி நடந்து கொள்கின்றோம் என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதை சாயி வாழ்ந்து காட்டி யிருக்கின்றார்.

இதிலிருந்து நான் உணர்ந்து கொண்டது, மலையளவு நம்மிடம் பொன், பொருள் இருந்தாலும்

உலகளவு பேர், புகழ் இருந்தாலும், கடவுளின் அன்பை நாம் ஒருபோதும் பெற முடியாது என்பதை பாகோஜி விசயத்தில் பாபா நிகழ்த்திய சம்பவங்களில் இருந்து உணர்ந்து கொண்டேன்.

அடுத்துவந்த சில நாட்கள் நானும், மாதவ்ராவ், நானா, மேகா ஆகியோரும் சேர்ந்து பாபாவைப் போற்றி பாடும் தெம்மாங்கு பாடல்களை இயற்றி பாபாவின் முன்னால் பாடிக்காட்டிக் கொண்டிருந்தோம். அன்று இரவு பாபா எங்கள் முவருக்கும் நாங்கள் பாடிய பாட்டை பாராட்டி ஆளுக்கு ஒரு ரூபாய் கொடுத்தார்.

மறுநாள் மாலை வேலையில், பாபாவுடன், மகல்சாபதி, மாதவ்ராவ், ஆகியோருடன் நானும் மற்றும் சிலருடன், தற்போது சமாதி மந்திர் அமைந்திருக்கும் இடத்திற்கு முன்பு நடந்து வந்து கொண்டிருந்தபோது, அமராவதியைச் சேர்ந்த திரு. கபர்டேயின் மனைவி பாபாவின் முன்னால் வந்து நின்றார்.

அவர் சற்று பதட்டத்துடன் இருப்பதுபோல் தோன்றியது. கைகால்கள் சற்று நடுக்கத்துடன் இருந்தது. அவர் தனது இளம்வயது மகனுடன் பாபாவை தரிசிப்பதற்கு அமராவதியில் இருந்து வந்து சீரடியில் சில நாட்களாக தங்கியிருக்கின்றார். அவரது மகனுக்கு கடந்த இரண்டு நாட்களாக கடுமையான காய்ச்சல் வந்து நெறிகட்டிக்கொண்டு "பிளேக்" நோயாக மாறி. அவனது உடல்



எங்கும் பெரிய பெரிய கட்டிகள் தோன்றி இருந்தது. அதைக்கண்ட அவனது தயார் மிகவும் பயந்துபோய் இருந்தாள்.

எனவே அந்தப் பெண் பாபாவிடம் தன் மகனுக்காக முறையிட வேண்டி பாபாவின் முன்னால் பயந்தபடி நின்றாள். பாபா அவளை கருணையுடன் பார்த்து, என்னம்மா உனக்கு பிரச்சனை. என்ன வேண்டும் உனக்கு என்று கேட்டார்.

அவள் நடுங்கும் குரலில் தனது மகன் பிளேக்கால் பாதிக்கப் பட்டிருப்பதை கூறி அழுதாள். பாபா அவளிடம் மிகவும் அன்பாக, "வானம் மேகங்களால் சூழப்பட்டிருக்கின்றது. அவைகள் விரைவில் உருகி கொட்டிவிடும். எல்லாம் எளிதாகவும், தூயதாகவும் மாறிவிடும் நீ கவலைப்படாதே என்று கூறினார்"

மேலும், உங்களுக்காக நான் இந்த தூவாரகாமாயில்

வசிக்கின்றேன். நீங்கள் ஏன் பயப்படுகின்றீர்கள். என்றவாறே தமது கஃனியை தனது முழுங்கால் வரை தூக்கி இங்கு பாருங்கள் என்றார். அனைவரும் பாபாவின் கால்களைப் பார்த்தனர். அங்கு பெரிது பெரிதாக பிளேக் நோய் கட்டிகள் தோன்றியிருந்தன.

பாபா கூறினார், " பாருங்கள் என்னை நம்பும் அடியவர்களுக்காக நான் எங்கனம் சிரமப்படுகின்றேன் என்று. அவர்களது கஷ்டங்கள் எல்லாம் எனதே ஆகும்" என்றார்.

அதை கண்ணுற்ற அங்கிருந்த மக்கள் அனைவரும் நமக்காக பாபா போன்ற ஞானிகள் எவ்வா றெல்லாம் தங்களது சிரமங்களை தாங்குகின்றனர் என்பதை உணர்ந்து கொண்டு, ஞானிகள் கருணை மிகுந்தவர்கள், வெண்ணையைப் போன்று மிருதுவானவர்கள் ஞானிகள் எவ்வித சுயநலமும் இன்றியே அடியவர்களையும், மக்களையும் நேசிக்கின்றனர் என்று பேசிக்கொண்டனர்.

கபர்டேயின் இளைய மகன் விரைவில் பிளேக் நோயில் இருந்து பூரணமாக குணமடைந்தான் என்று சொல்லவும் வேண்டுமோ?

அது அந்த வாரத்தின் கடைசி நாளான ஞாயிற்றுக்கிழமை மாலை வேலையில் மசூதியில் அமைதியாக அமர்ந்திருந்த பாபா திடீரென அருகே அமர்ந்திருந்த மகல்சாபதி, அப்பாசிந்தே, காசிராம் ஆகியோரிடம்," நாம் நால்வரும் இப்போது பஜனை செய்வோம் வாருங்கள். பண்டரிபுரத்தின் கதவுகள் திறந்திருக்கின்றன" என்றார்.

உடனே பாபா "நாங்கள் பண்டரிபுரத்திற்கு போகின்றோம் காலம் முழுவதும் அங்கேயே தங்கப் போகின்றோம். ஏனெனில் அதுவே எங்கள் பரமாத்மாவின் வீடு" என்று பொருள் படும்படி பாடத் துவங்கினார். மற்ற மூவரும் பாபாவுடன் சேர்ந்துகொண்டு பாடினர்.


அவர்கள் நால்வரும் பாடி முடிக்கும்முன் துவாரகாமாயிக்கு முன்னால் ஒரு குதிரை வண்டி வந்து நின்றது. வண்டியில் இருந்து இறங்கியவர் மரியாதைக்குரிய நந்துபாரின் மாமல்லதார் திரு.நானாசாகிப் அவர்கள். நானா பாபாவின் மிகச்சிறந்த அடியவர். அவர் பாபாவிடம் கொண்ட பக்தி அளவிடற்கரியது. பண்டரிநாதனே சாயி என்று நம்பிக்கையில் திளைப்பவர்.

அவருக்கு, அரசாங்கத்தால் பண்டரிபுரத்துக்கு மாறுதல் கிடைத் திருந்தது. உடனடியாக வேலையை ஒப்புக்கொள்ள வேண்டிய கட்டாயம். எனவே யாருக்கும் தெரிவிக்க முடியாத நிலை. உடனடியாக மூட்டை முடிச்சு களுடன் குட்பத்துடன் குதிரை வண்டியில்,தான் பூலோகவைகுண்ட மாக நினைக்கும் பண்டரிபுரத்திற்கு புறப்பட்டுவிட்டார்.

ஆனால் அதற்கு முன்பாக தனது வாழும் பண்டரிநாதனாகிய பாபா வசிக்கும் சீரடிக்குச்சென்று அவரையும் தரிசித்து விட்டுச்

செல்லலாம் என்று முடிவெடுத்து சீரடிக்கு வந்து இறங்கினார்.

நானா பண்டரிபுரம் போகும் வழியில் சீரடிக்கு வருவார் என்று ஒருவரும் யூகிக்கக்கூட இயலாத நிலையில் நானா சாஹேப் சீரடிக்கு அருகாமையை அடைந்த போது பாபா அறிந்து கொண்டு, நாங்கள் பண்டரிபுரத்திற்கு போக வேண்டும் என்று பாட ஆரம்பித்தாரே அப்போதே அவர் "சர்வாந்தர்யாமி" என்று புரிகின்றதல்லவா என்று மகல்சாபதி நானாவிடம் கூறி ஆச்சர்யப்பட்டார்.



இதைக்கேட்ட நானா சாகேப் உணர்ச்சிவசப்பட்டார். பிறகு தனது குடும்பத்துடன் பாபாவின் முன்னால் வீழ்ந்து வணங்கி, அவரது ஆசியைப் பெற்றுக்கொண்டு அவரது அனுமதியுடன் பண்டரி புரத்திற்குப் புறப்பட்டார்.

பாபா தனது சிறுவயதில் இருந்தே அனைத்துவிதமான யோகப் பயிற்சிகளையும் கற்றிருக்கின்றார் என்று அடியவர்கள் கூறி கேள்விப் பட்டிருக்கின்றேன். இன்று நான் அதை நேரில் பார்க்கும் வாய்ப்பு கிடைக்கும் என்று நான் நினைத்துப் பார்க்கவே இல்லை. அதிகாலை வேலையில் நான் காட்டுப்பக்கம் சென்று வரும்போது பாபா மசூதியில் இருந்து நெடுந்தொலைவில் இருக்கும் ஆலமரத்திற்கு அருகில் இருந்த கிணற்றுக்கடியில் நின்றிருப்பதைக் கண்டேன்.

அவரே கிணற்றில் இருந்து நீரை இறைத்து வாய் கழுவிக்கொண்டார். பின்னர் 20 அடிக்கும் மேற்பட்ட மெல்லிய லினன் துணியை சுருட்டி வாய்க்குள் இட்டு கொஞ்சம், கொஞ்சமாக விழுங்கினார். அதன் கடைசி முனையை கைகளில் வைத்துக்கொண்டு "தவ்தி" என்ற குடலை அசைக்கும் பயிற்சியை செய்ய ஆரம்பித்தார்.

அரைமணி நேரத்திற்குப் பின்னால், தான் கைகளில் பிடித் திருந்த துணியின் முனையைப் பற்றி மெதுவாக வெளியே இழுக்க ஆரம்பித்தார். இவ்விதம் இரைப்பையில் இருக்கும் அழுக்கு

களை வெளியேற்றும் கிரியா பயிற்சிகளை எளிதாக செய்தார்.

பாபா தமது சிறுவயது முதலே யோகப் பயிற்சிகளை முழுமை யாகப் பயின்றிருக்கின்றார். அவரது திறமையை ஒருவரும் அறிந் திருக்கவில்லை. தமது யோகத் திறமைகளின் மூலம் கிராமத்தில் பல நோயாளிகளுக்கு பலமுறை களில் சிகிச்சை அளித்து குணப் படுத்தியுள்ளார். ஆனால் அவர் யாரிடமும் எதையும் எதிர்பார்த்த தில்லை.

வைத்தியர்களில் எல்லாம் தலைச்சிறந்த வைத்தியரான அவர் தமது தேவைகளை எப்போதும் லட்சியம் செய்யவில்லை. மற்றவர்களின் நலனுக்காகவே எப்போதும் உழைத்தார். தாங்க முடியாத பல பயங்கர வலிகளை தமது அடியார்களுக்காக அவர் தாமே ஏற்றுக்கொண்டு அவர்களது துன்பத்தை போக்கியிருக்கின்றார்.

அவர் ஒருபோதும் தான் யார் என்பதை வெளிப்படுத்த விரும்பாதவராகவே காணப் பட்டார். அதனிலும் தன்னைப்பற்றி நினைவே இல்லாதவராகத்தான் வாழ்ந்தார் என்பதுதான் சரியாக இருக்கும். தன்னை எப்போதும் இறைவனின் அடியாராகவும், தனக்கு தொண்டு செய்பவருக்கு ஊழியாராகவுமே சாயி சிரடியில் வாழ்ந்தார் என்பதை ஹேமாட்பந்தாகிய நான் நேரில் பார்த்து வியந்து நின்றேன்.


எல்லாம் சாயி! எல்லாமே சாயி!!

"கூட்டுப்பிரார்த்தனை"

உங்களுக்காக! வழி நடத்துபவர் "பிரார்த்தனை செம்மல், பிரார்த்தனை சீலர், பிரார்த்தனை சிகரம்" த. சாய் கலியன்
M.com.,BL., MBA., M.sc(yoga).,CAIIB., Spiritual Healing Master. **வழக்கறிஞர் மற்றும் யோகா ஆசிரியர்.**

கல்வி, தொழில்,நோய்,வறுமை, கடன்,திருமணத்தடை, குழந்தையின்மை, குடும்ப பிரச்சினை எதுவாக இருந்தாலும் அவற்றிற்கெல்லாம் பொது நலன் கருதி, சேவை மட்டுமே கருத்தில் கொண்டு நமது கண்கண்ட கலியுக தெய்வம் சற்குரு சாயிநாதனிடம் பிரார்த்தனை செய்யப்படும்.

தொடர்புக்கு : த. சாய் கலியன் 34/22A, சிபி தெரு, பிரின்ஸ் சர்க்கிள், மகேந்திரபுரி, சேலம். 636008. தொலைபேசி:9962193311, 9092242598.



ஆசையா? தேவையா?

நமக்கு ஆசை! அதை நியாயமான ஆசை என்று நாமே நினைத்துக் கொள்கிறோம்! எந்த ஆசையும் நியாயமானதல்ல என்பதை நாம் ஒருநாளும் உணர்வதே இல்லை! நமது தேவை வேறாக ஆசை வேறாக இருக்கிறது! எது ஆசை? எது தேவை? என்பதை பகுத்தறியும்படி நம்மை உலக மாயை விடுவதில்லை!

ஆசைகளை நிறைவேற்ற பாபாவின் முன் நின்று வேண்டிக் கொள்கிறோம்! நிச்சயம் பாபா நம் ஆசையை நிறைவேற்றுவார் என்று நம்புகிறோம்! அந்த நம்பிக்கை பாபா மேலான அன்பினால் அல்ல, ஆசையை அடைய வேண்டும் என்ற தீவிர சுயநலத்தினால், என்பதனை நீங்கள் உணர்கின்றீர்களா?

நாம் ஆசைப்பட்டது நிறை வேற வேண்டும் என்று பாபாவிடம் வேண்டிக் கொண்டு, அது நிறை

பற்றறு



தள்ளாடும் வயதில் நம்மை தாங்கிப் பிடிப்பது தெய்வம் மட்டுமே! பேரனோ பேத்தியோ அல்ல, பகவான் பாபாவே நம்மை பாதுகாக்கிறார்! அதை மனம் உணர்வதற்குள் நமக்கு அடுத்த ஜென்மமே வந்து விடுகிறது! கண்களைக் கட்டிக் கொண்டு மகன்களை செல்லம் கொடுத்து குட்டிச் சுவராக்கி கடைசியில் ஸ்ரீ கிருஷ்ணர் மேல் பழியைத் தூக்கிப் போட்ட காந்தாரியைப் போல் மாயையில் ஊறித் திளைக்கின்றது பக்குவமற்ற மனித மனம்!

அது அப்படித் தான் பேசும்! "கடவுள் சோதிக்கிறார்!" என்று சொல்லும்! செய்த செயல்களுக்கான விளைவை அனுபவிக்க மனதில் சக்தி இன்றி கடைசியில் கடவுள் தான் காரணம் என்று மனித மனம் தப்பிக்க நினைக்கும்! எந்தக் குடும்பத்திற்காக மனிதன் முக்கால்வாசி ஆயுள் காலத்தை ஆன்மீக வாசனையே இல்லாமல் வீணடிக் கிறானோ, அதே குடும்பமே அவனது சக்தியற்ற நிலையில் அவனை மனதால் ஒதுக்கும்!

நிரந்தரமில்லாதவற்றுக்கு நாம் அதிக முக்கியத்துவம் தருகிற போது நிரந்தரமானது எது? என்ப தற்கான ஆன்ம தேடலும், பக்குவ உணர்வுக்கான பாதையும் இருட்டாகிறது! சேர்த்த சொத்தால் எந்த பயனும் இல்லை என்று உணரும் கடைசி நொடியில் நமது கண்ணீர் கூட பாபாவின் பாதங்களில் விழுவ தில்லை! ஆகவே தான் பற்றற்று இரு என்கிறார் பாபா! பற்றோடு இருந்து பாவங்கள் சேர்த்து பரிதாபகரமாக முடிவதற்கு பதிலாக, பற்றை அறுத்து பாபா பக்தராக திகழ்வது தான் நமது இந்த வாழ்க்கைக்கான ஆன்மீக அர்த்தம்.

வேறாமல் போகும் போது, பாபா வையே குறை சொல்கிறோம்! பாபா சொல்லி எதுவும் நிகழாமல் போனதே இல்லை! நாமே கற்பனை செய்து கொண்ட ஆசைகளை பாபா நிறைவேற்ற வேண்டும் என்று நாமே கூறிக் கொண்டு , பாபாவை வார்த்தை தவறிவிட்டவர் போல் குற்றம் சுமத்துவது நமக்கு இன்னும் பக்குவம் வரவில்லை என்பதையே காட்டுகிறது!

நமக்கு நன்மை தராத எந்த ஒரு வேண்டுதல்களையும் பாபா நிறை வேற்றுவதே இல்லை! எது நன்மையோ, எது ஞானத்தை நோக்கி நம்மை அழைத்துச் செல்லுமோ அதை மட்டுமே பாபா நம் வாழ்க்கையில் அனுமதிக்கிறார்! இன்று அது துயரமாக,வலியாக நமக்குத் தோன்றலாம்! அது நமது குறைபாடே தவிர வேறொன்றுமில்லை! ●

சாய் தியானாலயாவில் "சாயி லீலா"

2016 ஆம் வருடம் நமது சபைக்கு பரமேஸ்வரி என்ற (பெயர் மாற்றப்பட்டிருக்கின்றது) சகோதரி வந்தார். பாபாவின் மீது மிகுந்த பற்றுள்ள அவள் நமது சபைக்கு வந்து குருவின் சத்சங்கத்தில் அடிக்கடி கலந்து கொள்வாள். மற்றபடி யாருடனும் அதிகம் பேசாமல் அமைதியாக அமர்ந்திருப்பாள்.

ஒரு வருடத்திற்குப்பின் ஒரு நாள் குருவிடம் தனியாக பேசவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, தனது கதையை குருவிடம் பகிர்ந்து கொண்டாள். அவள் கடந்த ஐந்து வருடமாக ஒரு கிருஸ்துவ வாலிபனை காதலிப்பதாகவும் அதற்கு தனது வீட்டில் மிகுந்த எதிர்ப்பு தெரிவிப்பதாகவும் கூறி, தாங்கள் இருவருக்கும் தற்போது என்ன செய்வது என்று தெரியாமல் தவிப்பதாகவும் கூறி அழுதாள்.

குரு அவர்கள் அந்தப் பெண்ணை தேற்றி உங்களது காதல் உண்மையானது என்றால் கண்டிப்பாக பாபா உங்களை சேர்த்து வைப்பார் பயப்படவேண்டாம் என்று ஆறுதல் கூறி, நீ உனது காதலனை என்னிடம் கூட்டிவா நான் அவனிடம் பேசிப் பார்க்கின்றேன் என்று கூற மறுநாளே அந்தப் பெண் அவளது காதலனை குருவிடம்



கூட்டிக்கொண்டு வந்தாள்.

குருவும், அந்தப் பெண்ணின் காதலனுடன் பேசிப்பார்த்ததில் அவன் உண்மையாக அவளை நேசிக்கவில்லை என்பதை புரிந்து கொண்டார். அதுமட்டுமல்ல, அவன் பலதீய பழக்கவழக்கங்களுக்கு அடிமையானவன் என்பதையும் புரிந்து கொண்டு, அதை அவளிடம் மென்மையாக புரியவைக்க எவ்வளவோ முயற்சித்தார்.

ஆனால் அதற்கு அந்தப் பெண் அது எல்லாம் தனக்கு ஏற்கனவே தெரியும் என்றும், பாபா அவனை எனக்கு திருமணம் செய்து வைத்தால் நான் அவனை மாற்றிவிடுவேன் எனவே நீங்கள் அதைப்பற்றி கவலைப்படாமல், பாபாவிடம் பிரார்த்தனை செய்து

எனக்கு அந்தப் பையனையே திருமணம் செய்து வையுங்கள் என்று கெஞ்ச ஆரம்பித்து விட்டாள்.

குரு அவர்களோ, நீ கேட்பதைத்தான் சாயி தரவேண்டும் என்று பிடிவாதம் பிடித்தால், சாயி உனக்கு தரவேண்டும் என்று நினைத்திருப்பதை நீ வேண்டாம் என்று மறுப்பதாகாதா? உனக்கு சிறப்பானது எது என்று உன்னைவிட சாயிக்குத் தெரியும். அதை எப்போது உனக்கு தர வேண்டுமோ அப்போது யார் எதிர்த்தாலும் உனக்குத் தருவார்.

அதுவரை பொறுமையாக இருக்க முடியுமானால் இரு. இல்லை என்றால் உன் விருப்பம் போல் செய்து கொள். எனக்கு நீ விரும்பும் விசயத்தில் கலந்து கொள்ளவும், உனக்காக பாபாவிடம் பிரார்த்திக்கவும் விருப்பமில்லை என்று கூறிவிட்டார்.

அதற்குப்பின் குருவும் அவளது விசயத்தில் ஈடுபடுவதை தவிர்த்து வந்தார்.

ஆயினும் அவள் தொடர்ந்து சபைக்கு வந்து தனது விசயத்தில் பாபாவையே பெரிதும் நம்பியிருப்பதாகவும், கண்டிப்பாக சாயி தான் விரும்புவதை தனக்கு தரும்படி பிரார்த்தனை செய்யுமாறு குருவிடம் மன்றாடி வந்தாள்.

எனவே குரு அவர்கள் பெண்ணின் குடும்பத்தினரிடம் காதலனின் மனநிலைகளையும், தீய பழக்க வழக்கங்களையும் எடுத்துக்கூறி, திருமணத்திற்கு ஒத்துக்கொள்ள வேண்டாம் என்று கேட்டுக்கொண்டார்.

ஆனால், காதலனின் பெற்றோர்கள் யாருக்கும் தெரியாமல் இருவருக்கும் திருமணம் செய்து வைக்க முயற்சி செய்திருக்கின்றார்கள். தனது பெற்றோருக்குத் தெரியாமல் இந்தப் பெண்ணும் காதலனுடன் சர்சில் திருமணம் செய்து கொள்ள தன்னுடைய தோழியுடன் ஆட்டோவில் செல்லும்போது ஆட்டோ கவிழ்ந்து விட்டதாம்.

பெண்ணுக்கு காலில் பலத்த அடி பட்டதால் அப்போதைக்கு திருமணம் நின்றிருக்கின்றது. சிறிது நாட்கள் கழிந்த பின்பு, இருவரும் சேர்ந்து திருப்பதியில் திருமணம் செய்து கொள்ளலாம் என்று முடிவெடுத்து நண்பர்களுடன் திருப்பதிக்குச் சென்றுள்ளனர்.

திருப்பதிக்கு நண்பர்களுடன் சென்ற காதலன் உற்சாக மிகுதியால் மது அருந்திவிட்டு திருமண நேரம் போனதே தெரியாமல் மயக்கத்தில்



- ஜெயந்தி ஸ்ரீராம்

இருந்திருக்கின்றான். விபரம் தெரிந்த பெண்ணின் தோழிகள் அவளை எச்சரித்து திருமணம் நடைபெறாமல் தடுத்து ஊருக்கு அழைத்து வந்திருக்கின்றார்கள்.

அதன்பின்னர், பல்வேறு சந்தர்ப்பங்களில் குருவிடம் வந்த அந்தப் பெண், குருவிடம் பலவாறாக முறையிட்டு அழுது புலம்பினாள். குருவும் முடிவாக அவளிடம், அந்தப் பையன் உனக்கு சரிவர மாட்டான். ஆகவே தான் பாபாவே உன் திருமணம் நடக்கவிடாமல் தடை செய்கின்றார். ஆகவே உன் மனதை மாற்றிக்கொள்.

உனது வாழ்க்கையில் என்ன நடந்தாலும், நீ பாபாவின் மிகச் சிறந்த பக்தையாக இருக்கின்றாய். ஆகவேதான் பாபா உனக்கு துணையாக இருந்து நல்லது செய்ய விரும்புகின்றார். உனது வாழ்க்கையை பாபாவிடம் விட்டுவிட்டு உனது வேலையைப் பார். உனக்கு சரியான துணையை பாபாவே ஏற்படுத்திக் கொடுப்பார் என்று ஆறுதல் கூறி அனுப்பி வைப்பார்.

ஆனாலும் அந்தப் பெண் குருவிற்கு தெரியாமல் மீண்டும் இரண்டுமுறை திருமணத்திற்கு முயன்றும் அதுவும் தோல்வியிலேயே முடிந்திருக்கின்றது. இறுதியாக காதலர்கள் இருவரும் சேர்ந்து எப்படியோ இருவீட்டாரையும் சமாதானப்படுத்தி அவர்கள் இருவரது வீட்டாரையும் திருமணத்திற்கு ஒப்புக்கொள்ளச் செய்துவிட்டார்கள். அனைவரின்



ஒப்புதலோடு திருமணத்தேதி 2019 ஜூன் என்று குறித்தாயிற்று.

ஆனால் அந்த நேரம் கோவிட் வந்து ஊரடங்கு போடப்பட்டதால் திருமணம் நின்று போனது. அந்தப் பெண் நொறுங்கிப் போய்விட்டாள். சபைக்கு வந்து குருவிடம் கூறி கண்ணீர்விட்டு அழுதாள். குருவிற்கு அதற்குமேல் அந்த திருமணத்தை எதிர்த்து புண்ணியமில்லை என்பது புரிந்து கொண்டு, பாபா உன்னை கைவிடமாட்டார். உனது திருமணம் தள்ளிப் போகின்றது என்றால் ஏதோ காரணம் இருக்கும். பொறுமையாக இருக்கவும் என்று கூறி அனுப்பி வைத்தார்.

அடுத்த வந்த காலகட்டங்களில் மக்கள் கொத்து கொத்தாக கொரோனாவால் மடிந்து கொண்டி

குந்தனர். எப்படியோ காலர் கள் இருவருக்கும் ஒரே நேரத் தில் கொரோனாவால் பாதிக் கப்பட்டனர். மிகவிரைவில் காதலி குணமடைந்து வீட்டிற்குத் திரும்பினாள். காதலனோ தன்னுடைய தவறான பழக்க வழக்கங்களால ஏற்கனவே நுரையீரல் கடுமையாக பாதிக்கப் பட்டிருந்த தினால் கொரோனாவால் உயிரிழந்தான்.

காதலனை இழந்த அந்தப் பெண் அடிக்கடி சபைக்கு வந்து குருவை சந்தித்து தன் வாழ்க் கையை அழித்துவிட்டதாக பாபாவை குறை கூறுவாள். அனைத் தையும் பொறுமையாக கேட்டுக் கொண்டு குருவும் அவளை ஆறுதல் படுத்துவார். சாயி காரணம் இல்லாது காரியம் செய்யமாட்டார். வாழ்க்கையில் நான் நினைப்பது நடக்க வேண்டும் என்று பிடிவாதம் பிடிக்காமல் சாயி என்ன நடத்து கின்றாரோ அதை அப்படியே ஏற்றுக் கொள்ள முயற்சி செய். வாழ்க்கை வளமாகும் என்று கூறுவார்.

சிறிது காலம் சென்றதும். இவளது கதைகள் அனைத்தும் அறிந்த அவளது தோழன் ஒருவனே அவளுக்கு வாழ்க்கை தர முன்வந்து அவளை மணப்பூர்வமாக ஏற்றுக் கொண்டான். அவளும் பாபாவின் அருளால் நடந்து போனதை மறந்து அவனுடன் ஆனந்தமாக வாழ்ந்து வருகின்றாள். அவளுக்கு வாழ்க்கை கொடுத்த இளைஞனும் தீவிர பாபாவின் பக்தன் என்பது குறிப்பிடத்தக்கது. ●



சாட்சி

ஆன்ம சாதனை புரியும் போது கூட உலக சிந்தனை தொந்தரவு செய்கிறதே என்று கவலைப்படுபவர்களுக்கான ஞான வாசகங்கள் இவை! "கரையைப் போல கடல் அலையை வேடிக்கை மட்டுமே பார்"

இந்த உலகம் நமக்கு பிரச்சனை அல்ல, உலகம் சார்ந்த நமது கற்பனையே நமக்கு பிரச்சனை! மனிதர்கள் நமக்கு பிரச்சனை அல்ல, மனிதர்கள் சார்ந்த அபிப்ரியங்களே நம்மை பிரட்சனை. உலகத்தில் நான் பின்னிப் பிணைந் திருக்கிறேன் எனும் நினைப்பு தான் பிரச்சனை தருகிறதே தவிர உண்மையில் உலகம் அல்ல!

நமது எண்ணங்களால் தான் நமக்குப் பிரச்சனை! உலகத்தை துறந்துவிட்டேன் என்பதும், உலகத்தோடு உறவாடுகிறேன் என்பதும் வெறும் எண்ணங்களே! நமது எண்ணங்களின் படியே உலகம் சொர்க்க மாகவும், நரகமாகவும் அமைகிறது!

சரி! நாம் என்ன தான் செய்ய வேண்டும்? உலக சம்பவங்களோடும், நமது வாழ்வில் நிகழும் சம்பவங்களிலும் சாட்சியாக மட்டுமே நிற்க வேண்டும்! சாட்சி யாக வாழ்வதே ஆன்மாவாக வாழ்வது! சாட்சியாக வாழ்வதே ஞானத்தோடு வாழ்வது! சாட்சியாக வாழ்வதே சாயியாக வாழ்வது!

சர்க்கரையை குறைக்கும் கொத்தமல்லி

தனியா என்று அழைக்கப்படும் கொத்த மல்லியில் பல ஆரோக்கிய நன்மைகள் உள்ளன. பொதுவாக கொத்தமல்லியின் இலைகள் மற்றும் அதன் உலர்ந்த விதைகளும் தான் உணவுகளில் அதிக அளவு பயன் படுத்தப்படுகின்றன. கொத்த மல்லி மிகவும் பழமையான மூலிகையாகும்.

கொத்தமல்லி கி.மு 5000ம் ஆண்டுக்கு முன்பே கண்டறியப் பட்டது. இது இந்திய மூலிகை என்று பலரும் நினைத்து இருப்பர். ஆனால், இந்த மூலிகை தோன்றியது இத்தாலியில் தான். கொத்தமல்லி இலைகள் இல்லாமல் பலரின் சமையல் முழுமையடையாது. அப்படிப்பட்ட கொத்தமல்லியின் ஆரோக்கிய நன்மைகள் என்ன என்று பார்ப்போம் வாருங்கள்.

கொத்தமல்லி இலையில் வைட்டமின் ஏ மற்றும் வைட் டமின் சி போன்ற ஊட்டச் சத்துகள் நிறைந்து உள்ளன. அதுமட்டுமின்றி, நார்ச்சத்து, இரும்புச் சத்து, மெக்னீசியம், கால்சியம், வைட்டமின் கே, பாஸ்பரஸ் போன்ற ஏராளமான ஊட்டச்சத்துக்கள் கொத்தமல்லி இலையில் நிறைந்து உள்ளன.

100 கிராம் கொத்தமல்லி இலையில் 31 கிராம் கலோரி, 2 கிராம் கார்போ ஹைட்ரேட், 4 கிராம் புரதச் சத்து, 0.7 கிராம் கொழுப்புச் சத்து, 146 மி.கி கால்சியம், 5.3 மி.கி இரும்புச் சத்து, 4.7 கிராம் நார்ச்சத்து, 24 மி.கி வைட்டமின் சி மற்றும் 635 மி.கி. வைட்டமின் ஏ போன்றவை நிறைந்து உள்ளது.

ஆரோக்கியமான கண்களைப் பெற கொத்தமல்லியை உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும். கொத்தமல்லி இலையில் வைட்ட மின் ஏ, வைட்டமின் சி, வைட்டமின் ஈ மற்றும் கரோட்டினாய்டுகள் அதிக அளவில் உள்ளன. இவை உங்களின் கண் பார்வையை ஊக்குவிக்க உதவுகிறது

தினமும் கொத்தமல்லியை உணவில் சேர்த்துக் கொள்வதன் மூலம் மாகுலர் டிஜெனரேஷன் பிரச்சனையைத் தாமதப்படுத்தவும் மற்றும் கண்ணில் ஏற்படும் வெண்படலத்தை குணப் படுத்தவும் கொத்தமல்லி உதவுவதாக ஆய்வுகள் கூறுகின்றன. கொத்தமல்லி இலை யில் உள்ள வைட்டமின் சி மற்றும் வைட்டமின் ஈ மற்றும் வைட்ட மின் ஏ உங்களின் நோய் எதிர்ப்பு சக்தியை மேம்படுத்த உதவுகின்றன.

இதில் உள்ள வைட்டமின் சி இரத்த வெள்ளை அணுக்களை சிறப்பாக செயல்பட வைக்கவும், இரும்புச் சத்தை உடல் சரியாக உறிஞ்சவும் உதவுகிறது.

கொத்தமல்லியின் நிறமான பச்சை நிறம் அதில் உள்ள ஆக்ஸிஜ



நேற்றத்தின் இருப்பைக் காட்டுகிறது.

மேலும், கொத்தமல்லி இன்சுலின் சுரப்பைத் தூண்டி, இரத்த சர்க்கரை அளவைக் குறைக்கவும் செய்கிறது.

எல்லா உணவிலும் கொத்தமல்லி சேர்ப்பது அல்லது கொத்தமல்லி கலந்த தண்ணீரை தினமும் அருந்துவது உயர் இரத்த சர்க்கரை அளவுகளைக் குறைக்கும்.

அதிக கொழுப்பால் ஏற்படும் பிரச்சனையைக் குறைக்க கொத்தமல்லி இலைகளை உட்கொள்வதை வழக்கமாக்கிக் கொள்ளுங்கள். இதனை தினமும் எடுத்துக் கொள்வதன் மூலம் எல்டிஎல் எனப்படும் கெட்ட கொழுப்பு குறைவதோடு, எச்டிஎல் எனப்படும் நல்ல கொழுப்பு அதிகரிக்கவும் செய்யும்.

கால்சியம், மெக்னீசியம் மற்றும் பாஸ்பரஸ் போன்ற உங்களின் எலும்புகளை பலப் படுத்த உதவும் சத்துகள் கொத்தமல்லி இலைகளில் அதிகம் உள்ளன.

கொத்தமல்லியில் உள்ள அழற்சி எதிர்ப்பு செயல்பாடு கீல்வாதம் தொடர்பான வலியிலிருந்து உங்களின் எலும்புகளைப் பாதுகாக்கிறது. இதில் அதிக அளவில் உள்ள நார்ச்சத்து செரிமானப் பிரச்சனைகளில் இருந்து நிவாரணம் அளிக்க உதவுகிறது. அதுமட்டுமின்றி, வயிற்று வலி, வயிற்றுப்போக்கு, குடல் பிடிப்பு, வாயு மற்றும் குமட்டல் போன்ற பல்வேறு பிரச்சனைகளுக்கும் கொத்தமல்லி சிகிச்சை அளிக்கிறது.

கொத்தமல்லி இலைகளில் உள்ள இரும்புச் சத்து, வைட்டமின் ஈ மற்றும் வைட்டமின் ஏ போன்ற சத்துகள் சருமத்தை சேதப்படுத்தும் ப்ரீ ரேடிக்கல்களுக்கு எதிராக போராடுகிறது. எண்ணெய் சருமம் உள்ளவர்களுக்கான அதிகப் படியான எண்ணெயை உறிஞ்ச கொத்தமல்லி இலைகள் மருந்தாக செயல்படுகிறது.

கொத்தமல்லி சாறு டையூரிடிக் ஆக செயல்படலாம் என்று ஆய்வுகள் கூறுகின்றன.

இது இரத்த அழுத்தத்தைக் குறைக்கவும், கொலஸ்ட்ரால் அளவை கட்டுப்படுத்தவும், இதய நோய் அபாயத்தைக் குறைக்கவும் பயன்படுகிறது. கொத்தமல்லியை உணவில் சேர்த்துக் கொள்வது சோடியம் உட்கொள்ளலைக் குறைக்க உதவும்.

கொத்தமல்லி இலையின் சாறு மூளை செல்களை சேதத்திலிருந்து பாதுகாக்கிறது. அதோடு, நினைவாற்றலையும் மேம்படுத்துகிறது.

பலவகையினில் நமக்கு நன்மை பயக்கும் கொத்தமல்லியை உங்களின் அன்றாட உணவுகளில் கலந்து உண்டு நலம் பெறுங்கள்!

வாழ்க வளமுடன்! வாழ்கவையகம்!

வாசகர் குரல்...

என் குருவிற்கு மிக்க நன்றி!

"விமர்சனம்" பெட்டிச்செய்தி என் மனக்கலக்கத்திற்கு சரியான மருந்தாக இருந்தது. எனது குரு யோகி ஸ்ரீராம் பாபாவிற்கு மனமார்ந்த நன்றி! ஞானத்தை யாரிடம் கற்பது. இதைவிட எளிதாக யாரால் விளக்க முடியும். சாய் சரிதம் அருமை. திருவருள் தேடி அற்புதம். திருப்புகழ் தந்த அருணகிரிநாதரின் வரலாறு உடல் சிலிர்த்தது. உள்ளம் நிறைந்தது.


பாலக்கீரை கூட்டு செய்து பார்த்தேன். மிக அருமை.

– திருமதி. ப.இந்துமதி, அயனாவரம்.

இக்காலகட்டத்தில் அனைவரும் விமர்சனத்தை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. அதை எதிர்கொள்வது எப்படி என்பதற்கு விமர்சனம் பெட்டிச்செய்தியின் மூலம் மிகச்சிறந்த விளக்கம் அளித்த ஆசிரியரின் சேவைக்கு ஆயிரம் கோடி நமஸ்காரங்களை தெரிவிக்கின்றேன். ஆசிரியரின் சேவை என் போன்றவர்களுக்கு மிகவும் தேவை.

அதேபோன்று ஞானத்தை யாரிடம் கற்பது கட்டுரை மிக அருமை. இதைப்போன்று கட்டுரைகளை அதிகம் எழுதவும். அனைவருக்கும் பயனுள்ளதாக இருக்கும்.

– திருமதி. ஜெயசித்ரா, பொள்ளாச்சி.



எங்களது குருவும், ஆசிரியருமான யோகி. ஸ்ரீராம் பாபா அவர்களுக்கு எங்களது தீப ஒளித் திருநாள் வாழ்த்துக்கள். எனக்கும் எனது குடும்பத்தாருக்கும் பகவான் சாயிநாதரின் கருணை கிடைப்பதற்கு காரணமாக இருந்த "சாய் தியானாலயா ஆத்ம ஞான பீடம்" அமைய நானும் எனது குடும்பத்தாரும் எங்களால் முடிந்த உதவிகளை செய்வோம் என்ற உறுதியினை அளிக்கின்றோம்.

– திரு. மகாலட்சுமி தியாகராஜன், திருச்சி

பல்லக்கு ஊர்வலம் கட்டுரை மிகவும் அற்புதம். நான் பாபாவின் பரம பக்தை. நான் சீரடி செல்லும் போதெல்லாம் பல்லக்கு ஊர்வலத்தை காணாமல் ஊர் திரும்பியதில்லை. சில

ஆண்டுகளாக நான் சீரடி செல்ல வில்லை. தங்களது பல்லக்கு ஊர்வலம் கட்டுரையை படித்த போது சீரடி சென்று பல்லக்கு ஊர்வலத்தில் கலந்து கொண் டதைப் போன்று இருந்தது. மிக்க நன்றி சாய்ராம்.

– திருமதி. சுமலதா ,ஊரப்பாக்கம். சென்னை.

ஞானத்தை யாரிடம் கற்பது கட்டுரை மிகவும் அருமையாக இருந்தது. அற்புதமான விளக்கம். மீண்டும் மீண்டும் படிக்கத் தூண்டியது. இருந்தாலும் தத்த அவதாரிகள் என்றால் ஸ்ரீ பாதர், நரசிம்ம சரஸ்வதி, அக்கல்கோட் மகராஜ், மாணிக் பிரபு, சீரடி சாயிபாபா மற்றும் வடநாட்டில் தோன்றிய மகான்கள் மட்டும்தானா என்ற சந்தேகம் ஏற்படுகின்றது. அப்படியானால் தட்சிணாமூர்த்தி யார்? அவரது வழியில் வந்த முருகப் பெருமான், அகஸ்தியர், திருமூலர், போகர் இவர்கள் எல்லாம் யார்? தயவுசெய்து விளக்கம் தேவை. முடிந்தால் விளக்கமாக கட்டுரை எழுதினீர்கள் என்றால் மிகவும் சந்தோசம்.

– திரு. லோகநாதன், பரவை, மதுரை.

அன்பிற்கினிய ஆசிரியர் அவர்களுக்கு, தங்களது சாயி மகராஜ் குருவைத்தேடி மாத இதழை படிக்க நேர்ந்தது. அனைத்து செய்திகளும் மிகவும் நன்றாக இருந்தது. எனக்கு சாயிபாபாவைப் பற்றி அதிகம் தெரியாது. உங்களது இதழின் மூலம் பாபாவைப் பற்றி நிறைய செய்திகளை அறிந்து கொண்டேன். மாதம்தோறும் இதழைப் படித்து சாயிபாபாவைப் பற்றி அறிந்து கொள்ள ஆர்வமாக உள்ளேன். மிக்க நன்றி!

– திருமதி. காமாட்சி சந்திரசேகரன். மணப்பாறை.

வணக்கம் சாயி, யோகி ஸ்ரீராம் பாபா அவர்கள் எழுதும் சாயி சரிதம் இனிய தமிழில் எளிய நடையில் சரளமாக படித்து புரிந்து கொள்வதற்கு மிகவும் நன்றாக இருக்கின்றது. வாழ்த்துக்கள் சா யிலீலா, திருவருள் தேடி, அதி தேவதையும் சிறப்பு. இருப்பினும் தொடர்கள் அதிக இடத்தைப் பிடித் துக்கொள்கின்றன. தொடர்களை குறைத்துக்கொண்டு சாயி செய்தி களை அதிகம் வெளியிட்டால் இன்னும் சிறப்பாக இருக்கும்.

– திரு. சாயிநேசன் நாகராஜ், திருநெல்வேலி.

வாசகர்கள் தங்களது மேலான கருத்துக்களை " வாசகர் குரலில்" பதிவிட, கீழ்கண்ட வாட்ஸ் அப் நம்பருக்கு எழுதி அனுப்பும் படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

சாயிமகராஜ் குருவைதேடி இணையத்தில் படிக்க... www.saidhyanalaya.org

சாய் தியானா வாட்ஸ் அப் நம்பர் 9941816692

அன்னதான சேவை

அன்பிற்கினிய சாயி சொந்தங்களே...

நமது சாயி மகராஜ் குருவை தேடி பத்திரிகையின் சார்பாக, பிரதிவாரம் வியாழன் தோறும், நடமாட முடியாமல் இருக்கும் முதியோர்கள், உடல் ஊன முற்றோர்கள், மனநலம் குன்றியோர்களின் இருக்கும் இடம் தேடி சென்று அன்ன தான சேவை நடந்து வருகிறது. அன்னதான சேவையில் பங்குபெற காணிக்கை அனுப்ப விரும்பினால் கீழ்கண்ட வங்கி கணக்கிற்கு அனுப்பி உதவலாம்.

ஆன்லைனில் அனுப்ப:

S.Jayanthy, INDIAN BANK
AC.No: 602264370 , IFS Code No: IDIB000P056
(Purasaiwakkam Branch) Chennai
Gpay: 6385129372

இம்மாத அன்னதான நன்கொடையாளர்கள்

திரு.பாலகிருஷ்ணன்,அண்ணாநகர் ரூ.3000.

திருமதி.ஹேமாவதி நமசிவாயம். சாலிகிராமம்.ரூ.2000.

திருமதி. தேவி, சென்னை ரூ.2000.

திருமதி.கௌரி கிருஷ்ணமூர்த்தி, பெங்களூர். ரூ.1000.

திருமதி. பி. திருமலைச்செல்வி. கொளத்தூர். ரூ.1000.

திரு.ராஜசேகரன், குரோம்பேட்டை.ரூ.1000.

திருமதி.உமா, தூத்துக்குடி, ரூ.1000.

திருமதி.மகாலட்சுமி முருகன், மதுரை, ரூ.1000.

திரு. ஜெயசாந்தி நாகமூர்த்தி,AYK,ரூ.1000.

திருமதி. இராதாகணபதி, வேளச்சேரி. ரூ.1000.

செல்வி.வர்ஷிகா (எ) சாய்ஸ்ரீ, மதுரை. ரூ.1000.

திரு. கேஸ்வர், ஈரோடு, ரூ.700

திருமதி.சாந்தி, மயிலை. ரூ.500.

திருமதி.நேத்ராலட்சுமி. கோவை.ரூ.500.

திருமதி சாய் பத்மா, திருவள்ளூர். ரூ.500.

திருமதி. லதா பாபு, வேப்பம்பட்டு. ரூ.500.

வாழ்க வளமுடன் சுமதி, கொளத்தூர். ரூ.500.

திருமதி.நித்யா ராஜேந்திரன், கூடுவாஞ்சேரி. ரூ.500.

திரு. சாய்கிருபா, வாடிப்பட்டி.ரூ.500

திரு.கருணாமூர்த்தி.அயனாவரம். ரூ.500.

திரு. வெங்கட்ராமன், பெங்களூர்.ரூ.500.

திருமதி.பாக்கியவதி.ராணிப்பேட்டை. ரூ.400.

திருமதி. உமா விஜய் ஆனந்த், அயனாவரம். ரூ.200.

திரு. நிர்மலா, மனேஜர்,சி.சி பேங்க், பெரியார் நகர்.ரூ.200.

திரு.குமரன் ஸ்டோர்ஸ் – டிராவல்ஸ் பெரியார் நகர். ரூ.200.

திரு.கே.ராமமூர்த்தி.எல்.ஐ.சி. ஏஜெண்ட்.கொளத்தூர். ரூ.200.

திரு.சூர்யாகுமார். கேபிள்.டி.வி. மாவுத்தன்பட்டி. ரூ.150.

திரு.பாலசுப்பிரமணியன், சீரடி. ரூ.108.

திரு.சிவா அரிசி கடை.பெரியார் நகர். ரூ.100.

திருமதி. திலகா ஷ்யாம்சுந்தர். ரூ.101.

திரு. ஜெ. பாலாஜி, வில்லிவாக்கம். ரூ.101.

திருமதி. பிச்சையம்மாள், பெரம்பூர்.ரூ.100.

திரு. கோபால் சாய், விருகம்பாக்கம்.ரூ.100.

திரு.அகஸ்டின் குடும்பத்தார். குன்றத்தூர். அரிசி 1 மூ.

என் பொருட்டு நீ பிறருக்கு செய்யும் அன்னதானத்தின்
ஒவ்வொரு பருக்கையும் என் வாயில் இடுவதாக அர்த்தம்.

சந்தா செலுத்தும் அன்பர்களுக்கு...

* 1 வருட சந்தா – ரூ. 220 (தபால் செலவு உள்பட)
* 3 வருட சந்தா – ரூ. 550 (தபால் செலவு உள்பட)
* **5 வருச சந்தா – ரூ.1000 (தபால் செலவு உள்பட)**
* ஆயுள் சந்தா – ரு. 2,000 (தபால் செலவு உள்பட)

காணிக்கை, சந்தா அனுப்புகின்றவர்களுக்கு மாதம்தோறும் சாயிமகராஜ் குருவை தேடி புத்தகம் உங்கள் இல்லம் தேடி வரும். காணிக்கை சந்தா அனுப்புகிறவர்கள் தவறாது தங்கள் முகவரியை கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

V. ஸ்ரீராம், ஆசிரியர் 99418 16692, 88258 31068
'சாயி மகராஜ் குருவை தேடி',
9/1A, பழனியப்பா இரண்டாவது தெரு,
அயனாவரம், சென்னை – 600023.

ஆன்லைன் மூலம் காணிக்கை, சந்தா செலுத்த...

V.SRIRAM
INDIAN BANK (Purasaiwakkam Branch) Chennai
AC.No: 6219480677
IFS Code No: IDIB000P056.

புத்தக வளர்ச்சி நன்கொடையாளர்கள்

- திரு. பிரதீபா தீதி, சேலம், ரூ.501.
- திரு. ஜெயலட்சுமி தேவகுமார். பெரம்பூர்.ரூ.200.
- திருமதி. பா. நிவேதா கருணாகரன். சென்னை. ரூ.200.
- திரு. உமா சங்கர், பாடி. ரூ.200.
- திரு.வேணுகோபால், நங்கநல்லூர்.100.
- திரு.ஸ்ரீ. ஸ்ரீனிவாசன், .நங்கநல்லூர் ரூ.100

Owned, Publishsed and Printed by: V.SRIRAM. From17/7A, Palaniappa 1st Street, 1st Floor, Ayyanavaram, Chennai-23.At Printed by him at JAYANTHI PRINTERS at No.5.GOVINDARAJAN STREET, PULIYURPURAM, KODAMBAKKAM, CHENNAI -600 024.Editer: V.SRIRAM.





எங்களிடம் மாட்டு கொழுப்பு, ரசாயணம் கலக்காத சுத்தமான தேங்காய் எண்ணெய், வேப்ப எண்ணெய் கொண்டு கைகளால் தயாரிக்கப்பட்ட குளியல் சோப் கிடைக்கும்.

விபரங்களுக்கு:
ஸ்ரீசாய்ராம் ஆத்மஞான சபை, அயனாவரம் – 23.
போன்: 9941816692, 8825831068.

சாய் ராஜயோகாவின் தயாரிப்பு



அமிர்த சூரணம்

அனைத்து நோய்களுக்கும் ஒரே தீர்வு. தொடர்ந்து மூன்று மாதம் எடுத்துக் கொள்ள அதிசயத்தக்க மாற்றத்தை நீங்களே உணரலாம்.


குப்பைமேனித் தைலம்

அனைத்துவிதமான தோல் நோய்களுக்கும் ஓர் அற்புத தீர்வு. சொறி, நமைச்சல் இருக்கும் இடங்களில் தடவ ஒரிரு நிமிடத்திலேயே குணம் கிடைக்கும்.



தேவைக்கு தொடர்பு கொள்ளவும்:
சாய் ராஜயோகா இயற்கை நல்வாழ்வு மையம்
9941816692,
8825831068.

தலைமுடி பிரச்சனைகள் அனைத்திற்கும் 25 மூலிகைகள் அடங்கிய அட்சயா ஹேர் ஆயில் மூலம் ஒரே தீர்வு!



* இயற்கையான பாரம்பரியமுறைப்படி தயாரிக்கப்பட்ட உன்னத ஹேர் ஆயில்.
* பொடுகு, பேன் நீக்கி கருமையான, அடர்த்தியான கூந்தலைப் பெறலாம்.
* இளநரை,செம்பட்டை, முடி உதிர்வு, முடி பிளவு போக்கும்.
* தூக்கம் இன்மை, டென்ஷன் சரி செய்யும்.
* ஆண், பெண் இருவருக்குமானது.

சாய் இராஜ யோகாவின் சீயக்காய் ஹேர்வாஷ் பவுடர்



100 சதவீதம் இயற்கையான பாரம்பரிய முறைப்படி தயாரிக்கப்பட்ட சீயக்காய் பவுடர்



அமிர்தா மூலிகை டீ தூள்

ஆவாரம் பூ, செம்பருத்தி, தாமரை, ரோஜா, துளசி, வேப்பம்பூ, சுக்கு,மிளகு,திப்பிலி,கிராம்பு,சித்தரத்தை, ஏலக்காய் கொண்டு தயாரிக்கப்பட்டது. நீரிழிவு, இதயநோய், இருமல், சளி, இளைப்பு, தலைச்சுற்றல், உடல் பலவீனம் நீங்கும். நல்ல செரிமானம் ஆகும்.

அமிர்தா வேலம்பட்டை பல்பொடி



பல்வலி,சொத்தை,கூச்சம்,பல் ஆட்டம்,ஈறு வீக்கம்,துர்நாற்றம், முதலிய பல் நோய்களுக்கு மிகச் சிறந்த பல்பொடி.

விபரங்களுக்கு: ஸ்ரீ சாயிராம் ஆத்மஞான சபை
99418 16692, 88258 31068